விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 334 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 02 ஞாயிற்றுக்கிழமை (17.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## அறவழி அரசியல் பயணத்தை உறுதியோடு தொடர்வேன்



### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
தடைகளைத் தாண்டி அறவழி அரசியல் பயணத்தை உறுதியோடு தொடர்வேன் என பாராளுமன்ற 19

## 25க்கு குறைவான அங்கத்தவர்களுடன் புதிய அமைச்சரவை திங்களன்று நியமனம்

(கொழும்பு)
புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை, நாளை திங்கட்கிழமை நியமிக்கப்படும் என, தேசிய 19

## 21ஆம் திகதி பாராளுமன்ற கன்னி அமர்வு
# ஜனாதிபதி அநுர குமாரவின் கொள்கைப் பிரகடன உரை

(கொழும்பு)
எதிர்வரும் 21ஆம் திகதி 10ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார்.
(04ஆம் பக்கம் பார்க்க)

## புதிய உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)
பொதுத் தேர்தலில் வாக்காளர்களால் 19

## புதிய சபாநாயகராக பிமல் ரத்நாயக்க?

(கொழும்பு)
புதிய பாராளுமன்றத்தின் சபாநாயகராக தேசிய மக்கள் சக்தி கட்சியின் உறுப் 19



## தோல்வியடைந்த எவருக்கும் தேசியப்பட்டியல் இல்லை
### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)
தேசியப்பட்டியல் எம்.பி.களுக்கான பட்டியலில் ஏற்கனவே கட்சிகளால் பரிந்துரைக்கப்பட்டவர்களை மட்டுமே தேசியப்பட்டியல் எம்.பிக்களாக பாராளுமன்றத்திற்குப் பெயரிட முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
சமீபத்திய பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்படாத வேட்பாளர்களோ அல்லது வேறு எவருமோ தேசியப் 19

## தேசியப் பட்டியல் மூலம் நாமல்



(கொழும்பு)
ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சிக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தேசியப் பட்டியல் வாய்ப்பை அந்தக் கட்சியின் தேசிய 19


## 22ஆம் திகதிவரை வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும்22ஆம் திகதி வரை வடக்கில் மிதமான 19

## ஒரு வார காலத்துக்கு அமைதியான காலம் அமுல்
### பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)
2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அடுத்த ஒரு வார காலத்துக்கு அமைதியான காலம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகப் பிரதிப்பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் 19

உடனிருந்த அனைவருக்கும்
உள்ளார்ந்த நன்றிகள்...!



நடைபெற்று முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில், தங்கள் வாக்குகளால் எனக்கு ஆணை வழங்கிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

கடந்த 15 வருடகால அரசியற் பயணத்தில் என் ஆத்ம பலமாகவும், அரசியற் பலமாகவும் தம் உடனிருப்பை வழங்கி, கொள்கையின்பாற்பட்ட பயணத்தின் பங்குதாரர்களாக இருந்த உங்கள் ஒவ்வொருவரது கரங்களையும் நன்றியோடு பற்றிக்கொள்கிறேன்.

என்னுள் நானாக இருந்து என்னை இயக்கும் எங்கள் தேசத்தில் விதையுண்ட ஆத்மாக்களின் அரூப பலத்தோடு, என் மக்களுக்கான தமிழ்த்தேசியப் பயணத்தை தடையற்றுத் தொடர்வேன்.

"நிலையிழக்க வைத்த அலைகளின் நடுவே தமிழ்த்தேசியக் கொள்கைக்கு கிடைத்த இந்த வெற்றி கார்த்திகையின் கனதியை உறுதி செய்யட்டும்"



என்றும் மக்கள் பணியில்,
சிவஞானம் சிறீதரன்.
(C-1603)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**சிதம்பரநாதன் இளங்குன்றன்**

{யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் ( 40 ஆம் அணி )}



பிறப்பு : 08.09.1997 அழிப்பு : 17.11.2020

கொடியோரின் நயவஞ்சகத்தால் உன் திருமுகம் மறைந்து ஆண்டு நான்கு ஆனாலும் மறையாது உன் நினைவுகள்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-1598)

நிரந்தர முகவரி
நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில்.

தற்காலிக முகவரி
மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

---

## தென்னிந்திய தலயாத்திரை

12 நாட்கள் | 35 + ஆலயங்கள்

திருப்பதி, அறுபடை வீடுகள், பஞ்சபூத தலங்கள், நவக்கிரக கோயில்கள் உள்ளடங்கலாக 35 இற்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம்.

## ஷீரடி சாய் பாபா தரிசனம்

5 நாட்கள்

ஷீரடி சாய்பாபா பக்தர்கள் ஷீரடி சென்று சாய்பாபாவை தரிசித்து அருளாசிகளைப்பெற ஒரு வாய்ப்பு

### கட்டணத்தில் உள்ளடங்குபவை

- விசா
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு
- விமானப் பற்றுச் சீட்டுகள்
- தேநீர்/ பழச்சாறு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- சுற்றுலா மேலாளர்
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- சிறப்புத் தரிசன நுழைவுச் சீட்டுக்கள்

பாதுகாப்பான மற்றும் சௌகரியமான பிரயாணங்களுக்கு சிறந்த தெரிவு

**SRIBABY TRAVELS & TOURS**

**076 946 4568**

1/1-220, Stanly Road, Jaffna.

(2446)

---

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 - 02 - 1963



இறப்பு 16 - 11 - 2024

**சரவணமுத்து இராசேஸ்வரன்** [ராசன்]

(ஓய்வு நிலை பரிசாரகர் M.A – யாழ். போதனா வைத்தியசாலை)

குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் கேணிக்கரை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராசேஸ்வரன் அவர்கள் 16.11.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாலினிதேவி(சுசீலா) அவர்களின் அன்புக் கணவரும் சரவணமுத்து - கதிராசிப்பிள்ளை(சின்னதங்கம்) தம்பதியரின் பாசமிகு மகனும் கனகலிங்கம் - சரஸ்வதி(பரஞ்சோதி) தம்பதியரின் மருமகனும் கலைவாணியின் அன்புக் கணவரும் நிரோசனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நேசம்மா, காலஞ்சென்ற ராசலிங்கம் மற்றும் சுப்பிரமணியம்(சின்னதம்பி), கந்தசாமி(வெள்ளை), யோகேஸ்வரன் (யோகன்), ஜெகதீஸ்வரன்(தீசன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இ.பரமானந்தன், இந்திராணி, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் பரமேஸ்வரி, கலா, றூபி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.11.2024 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிரோ - 075 932 1491
யோகன் - 0041789363800
தீசன் - 00417792211993

தகவல்:
குடும்பத்தினர்

(2450)

---

## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக இல.174 கடையும், காணியும் உடன் விற்பனைக்குண்டு.

16 அடி அகலமும் 216 அடி நீளமும்

தொடர்பு
**077 7232 535**

(C-1502)

## கல்லறை காணி விற்பனைக்கு

J /136 கிராம சேவையாளர் பிரிவில் பிரசாத் வீதியில் நி.ப. 1 குளி 14 இதில் குளி 14 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

கிறிஸ்தவ கல்லறைப் பூமிக்கு தேவைப்படும் கிறிஸ்தவ போதகர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 6021 799 / 076 0648 762**

(2445)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் திரு. ஸ்ரீ. சிவகனேசன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **கலாவதியம்மா ஸ்ரீபுஸ்பகாந்தன்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த அனுதாபங்கள்:-
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்

(C-1597)

---

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடியில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்

1 பரப்பின் விலை 23 இலட்சம் ரூபாய் [ 23 00 000/= ]

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை.

**076 755 8606, 070 168 3354, 070 668 3354**

(2448)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராய் மருதனார்மடம் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 1 பரப்பின் விலை 21 இலட்சம் ரூபாய் [ 21 00 000/= ] மட்டுமே
- உரும்பிராய் சந்தி 1 கிலோமீற்றர் தூரம்

**076 436 5814, 077 468 3354**

(2448)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 20 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்

1 பரப்பின் விலை 15 இலட்சம் ரூபாய் [ 15 00 000/= ]

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான
- காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

**077 288 0152, 076 739 0413**

(2448)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அநுர அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்

## உலகநாடுகளுக்கு எரிக்சொல்ஹெய்ம் அழைப்பு

**(கொழும்பு)**

**இலங்கை பாராளுமன்ற தேர்தலில் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள மகத்தான பெரும் வெற்றி ஆழமான சீர்திருத்தங்களிற்கான ஆணையை வழங்குகின்றது என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**



அவர் பதிவிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அநுரகுமார திசாநாயக்க அல்லது மக்களால் ஏகேடி என அழைக்கப்படும் இடதுசாரி கூட்டணியின் தலைவர் அநேகமாக அனைத்து தொகுதிகளிலும் அவர் வெற்றிபெற்றுள்ளார்.

இது இலங்கைக்கு என்ன தேவையோ அதனை செய்வதற்கான வலுவான வாக்குறுதியை வழங்குகின்றது.

அதன்பிரகாரம் நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு சிறந்த ஒப்பந்தத்திற்காக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதுடன் பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையில் சிக்கியுள்ளவர்களை அதன் பிடியிலிருந்து மீட்பதற்கான பொருளாதார சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

தேசிய நல்லிணக்கம், சிறுபான்மை தமிழர்கள், முஸ்லிம்களிற்கான உரிமைகள், ஊழலிற்கு எதிராக கடுமையான போராட்டம், சுற்றுலாத்துறையில் பசுமை பொருளாதாரத்தை உருவாக்குதல் என பல திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே இலங்கையின் அனைத்து நண்பர்களும் அதற்கு உதவ தயாராகவேண்டும் என பதிவிட்டுள்ளார். (ரி-8)

# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

அகவை அறுபதில் சேவை நிறைவு காணும்
எமது இணைந்த கணித பாட ஆசிரியை

**திருமதி.**
**ரோகினி ஞானமூர்த்தி**
(B.Sc,Dip.in Ed., SLTS 1)



- ம/புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி (1992.09.01-1998.02.06)
- க/கண்டி புனித அந்தோனியார் கல்லூரி (1998.02.07-1999.10.03)
- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி (1999.10.04-2012.09.05)
- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி (2012.09.06-2013.06.02)
- யா/விக்னேஸ்வரக் கல்லூரி (2013.06.03-2024.11.16)

Congratulations.

**அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றிய எமது ஆசிரியை பணிநிலை ஓய்வுக் காலத்தில் சகல செல்வங்களுடனும் நீண்ட ஆயுளுடனும் என்றென்றும் மகிழ்வுற்றிருக்க உள நிறைவோடு வாழ்த்துகின்றோம்.**

(548)

வாழ்த்துவோர்- **கல்லூரி சமூகம்.**
**யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி.**

# விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை

**ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் கார்த்திகை மாதம் 05 ஆம் நாள் (20.11.2024) புதன்கிழமை பஞ்சமி திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 08.11 மணி முதல் 10.10 மணி வரையுள்ள தனுர்லக்ன சுபமுகூர்த்த வேளையில்**

அராலி வண்ணபுரம் சிவன் கோவில் காஸ்யப கோத்ரம்
கங்காதரக்குருக்களின் நப்திரியும்
சிவசுப்பிரமணியக் குருக்களின் பௌத்திரியும்
சிவகணேசக்குருக்கள்- ஸ்ரீமதி அமிர்தாம்பாள்
தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியுமான

**சௌபாக்யவதி- சியாமளஜனனி**
B.Eng(Hons)
என்கிற வதுவை



சிவஸாயுஜ்ய ஷண்முகநாதக்குருக்கள் சிவஸாயுஜ்ய
நகுலேஸ்வரி அம்மாளின் பௌத்திரனும் சிவஸாயுஜ்ய
சோமஸ்கந்தக்குருக்கள்- ஸ்ரீமதி நாகேஸ்வரி அம்மாளின்
தௌஹித்திரனும்
மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ இரத்தினசபாபதிக்குருக்கள்
-ஸ்ரீமதி கலாவதி தம்பதியினரின் ஏகபுத்திரனுமாகிய
மாவையாதீன இளவரசு, சிவாகம பாஸ்கர

**சிரஞ்சீவி-ஞானஸ்கந்த ஸர்மா**
BSc.MBA..
என்கிற வரனுக்கு

கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்கிரஹணம் செய்வதாய் கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் கிருபையாலும் மாவிட்டபுரம் மாவையாதீனம் ஸ்ரீ கந்தசுவாமியார் அனுக்கிரகத்தாலும் வண்ணபுரம் (அராலி) விசாலாக்ஷி அம்பிகா தேவி சமேத விஸ்வநாதர் சுவாமியார் அனுக்கிரகத்துடன் மேற்படி சுபமுகூர்த்தம் பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று மருதனார்மடம் "சமுத்திர மஹால்" திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் குடும்பஸகிதம் முன்னதாகவே வந்திருந்து சுபமுகூர்த்தத்தை நடாத்தி வைத்து தம்பதிகளை ஆசீர்வதித்து எங்களையும் கௌரவிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

**சமாவர்த்தனம் அதிகாலை 05:00 மணி முதல் மணமகன் இல்லத்திலும்**
**வரவேற்பு உபசாரம் 21-11-2024 வியாழக்கிழமை மாலை 05:00 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**
**தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தங்கள் அன்புள்ள
சிவஸ்ரீ. சி.சிவகணேசக்குருக்கள் அமிர்தாம்பாள் தம்பதிகள்
வண்ணபுரம் சிவன்கோவில், அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
077 933 8104

தங்கள் அன்புள்ள
மஹாராஜஸ்ரீ.து.ஷ இரத்தின சபாபதிக்குருக்கள் ஸ்ரீமதி கலாவதி
ஸ்ரீ கந்தசுவாமி கோவில், மாவை ஆதீன பேரரசு, மாவிட்டபுரம், தெல்லிப்பளை.
0212243334

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 135 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி




தென் ஆபிரிக்கா மற்றும் இந் தியா அணிகளுக்கு இடையிலான 4 ஆவது ரி-20 போட்டி ஜோகனஸ் பெர்கில் நடைபெற்றது.

நாணயசுழற்சியில் வென்று முத லில் துடுப்பெடுத்தாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒரு விக்கெட்டுக்கு 283 ஓட்டங்களை குவித்தது.

சஞ்சு சாம்சன் 109 ஓட்டங்க ளையும், திலக் வர்மா 120 ஓட்டங்க ளையும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இதையடுத்து, 284 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் தென் ஆபிரிக்கா அணி களமிறங்கியது.

முன்னணி வீரர்களின் துடுப் பாட்டத்தில் சோர்வு ஏற்பட்டதால் 10 ஓட்டங்களுக்குள் அந்த அணி 4 விக்கெட்டுக்களை இழந்தது.

ஸ்டபஸ் மற்றும் மில்லரின் இணைப் பாட்டத்தில் 5 ஆவது விக்கெட்டுக்கு 86 ஓட்டங்களை பெற்றனர். மில்லர் 36 ஓட்டங்களையும், ஸ்டப்ஸ் 45 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந் தனர்.

இறுதியில், தென் ஆபிரிக்கா 148 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக் களையும் இழந்தது.

இதன் மூலம் இந்திய அணி 135 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் ரி-20 தொடரை 3-1 என கைப்பற்றியது. (நி-8)

## அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர்

## கோலி பொறுமையாக விளையாடுவது அவசியம் - ரவிசாஸ்திரி



கோலி அமைதியுடனும் கவனத்துட னும் விளையாடுவது மிகவும் முக்கியம்.

அவுஸ்திரேலிய தொடரில் கோலி தனது பார்மை மீண்டும் பெறுவார் என்று நம்புகிறேன் என ரவிசாஸ்தி தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி, அவுஸ் திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. முதல்டெஸ்ட் வருகிற 22 ஆம் திகதி பெர்த்தில் ஆரம்பமாகிறது.

சமீபத்தில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா சொந்த மண் ணில் இழந்தது. இதனால் இந்திய அணி நெருக்கடியில் உள்ளது. இத்தொடரில் விராட் கோலியின் பட்டிங்கும் சிறப்பாக இல்லை.

இந்த நிலையில் கோலிக்கு முன் னாள் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி அறிவுரை வழங்கி உள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

கோலி தனது கோட்டையான அவுஸ்திரே லியாவுக்கு மீண்டும் திரும்பியுள்ளார். கிங் எனும் பட்டத்தை நீங்கள் அவுஸ்தி ரேலியாவில் சிறப்பாக விளையாடி எதிர ணியிடம் பெற்றுள்ளீர்கள். எனவே கோலி பட்டிங் செய்ய செல்லும் போது அது எதிரணியின் மனதில் இருக்கும்.

இந்த தொடரின் முதல் 3 இன்னிங்சில் முதல் ஒரு மணி நேரம் கோலி அமைதி யுடனும் கவனத்து டனும் விளையாடு வது மிகவும் முக் கியம். அந்த நேரங் களில் நீங்கள் வேகமாக இல்லாமல் பொறுமையுடன் நிதானமாக உங்களு டைய சொந்த வேகத்தில் விளையாடி னால் அனைத்தும் சரியாகி விடும். அவுஸ் திரேலிய தொடரில் கோலி தனது பார்மை மீண்டும் பெறுவார் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (நி-8)

## ஜனாதிபதி ....

பாராளுமன்றத்தின் முதலாவது கூட் டத் தொடரின் முதலாவது அமர்வு நாளில் பல்வேறு முக்கியமான நடவடிக்கைகள் நடைபெறுவதால் அன்றையநாள் மிகவும் விசேடதினமாகும்.

முதலாவது அமர்வில் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கே பிரதான பொறுப்புக் காணப்படுகின்றது.

முதலாவது நாளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேடமான ஆசன ஒதுக்கீடுகள் எதுவும் இருக்காது என்பது டன் விரும்பிய ஆசனத்தில் அமர்வதற் கான வாய்ப்புக் கிடைக்கும்.

செங்கோல் வைக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாள் மற்றும் நேரம் அடங்கிய ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படு வது முதலாவது விடயமாக சபையில் முன்னெடுக்கப்படும்.

அதன் பின்னர் அரசியலமைப்பின் 64(1) உறுப்புரை மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 04, 05 மற்றும் 06 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபாநாயகரை வாக்களிப்பின் மூலம் நியமித்தல், சபாநாயகர், பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுதியுரை வழங்கப் படும்.

இதனையடுத்து பிரதி சாபாநாயகர், குழுக்களின் தலைவர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோர் வாக்கெடுப் பின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப் பட்ட உறுப்பினர்கள் அனைவரும் முதலா வது பாராளுமன்ற நாள் அமர்வில் பாராளு மன்ற உறுப்பினர்களின் பெயர் அட்ட வணை எனும் புத்தகத்தில் கையொப்ப மிடுதல் வேண்டும்.

இதில் சபாநாயகர் முதலில் கையொப்ப மிடுவார் என்பதுடன் அடுத்து பிரதமர் கையொப்பமிட்டதும் ஏனைய பாராளு மன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்ப மிடுவது சம்பிரதாயமாகும்.


இந்தச் செயற்பாடுகள் பூர்த்தியடைந் ததும் முதல்நாள் அமர்வுகள் ஒத்திவைக் கப்படுவதுடன் அடுத்த பாராளுமன்ற அமர்வு நாள் அறிவிக்கப்படும்.

எனினும் அரசியலமைப்பின் 33வது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதியினால் அன்றையதினம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகன உரை நிகழ்த்தப் படுமாயின், முதல் நாளின் பிரதான பணிகள் நிறைவடைந்ததும் தற்காலிக மாக சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடும்போது ஜனாதிபதி பாராளுமன்றத் திற்குத் தலைமைதாங்கி கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்த முடியும்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து ஜனாதிபதி பாராளு மன்றத்தை அடுத்த அமர்வு தினத்துக்கு ஒத்திவைப்பார். (மு-[illegible])


## மரண அறிவித்தல்

பிறப்பு
16 - 07 - 1934



இறப்பு
16 - 11 - 2024

### இரத்தினம் ஞானம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் ஞானம் அவர்கள் 16.11.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா, குணரத்தினம், தங்கம்மா, அன்னம்மா, சிவரத்தினம், இரத்தினம், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாநிதி (ஓய்வுநிலை உப அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயக்குமார்(கொழும்பு), சாந்தகுமார்(லண்டன்), சிவநிதி(கொழும்பு), கருணசீலன்(சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரேசன், வசந்திதேவி, வாசுகி, ரவீந்திரன்(மாருதி மணிஎக்சேஞ்), தர்மஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் விபீசாந், பிரசாந்(பவன்), தயானந்தி, நிரோஷானந், நிருசங்கர், காயத்திரி, வர்ஷா, ருக்ஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.11.2024) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல் : குடும்பத்தினர்
077 634 8948

(2449)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU, MoneyGram, Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974**


## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு மூலமூர்த்தி பூஜை மற்றும் வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-8)


## மணமகன் தேவை

1991, இந்து. உத்தராடம், LECTURER
பூர்வீகம் – யாழ்ப்பாணம், வதியுமிடம் – கொழும்பு
மணமகள் பதிவு இல: 11191.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1975, இந்து. ஹஸ்தம், MANAGER
பூர்வீகம் – மூளாய், வதியுமிடம் – CANADA
மணமகன் பதிவு இல: 11155.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com


## அறிவித்தல்

உயர்தரத்தை நோக்கமாகக் கொண்ட வடமாகாணத்தின் முன்னோடி டயர் மீள் நிரப்பு நிறுவனமான நோர்தேண் இன்டஸ்ரீஸ் சிறிது கால இடைவேளையின் பின்னர் ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியோடு அறியத் தருகின்றோம்.

**இயக்குநர்**
**நோர்தேண் இன்டஸ்ரீஸ் (பி)லிமிட்டேட்**
**69, பிறவுண் வீதி, கொக்குவில்**
**021 222 1735, 070 714 8691**

(2441)

## மணமகள் தேவை

பூர்வீகம்-யாழ்ப்பாணம், 22.03.1992 இல் பிறந்த, (32 வயது) 5'3" உயரம், இந்து, விருச்சிக இராசி, அனுஷம் நட்சத்திரம், M.Tech (Masters in Technology) படித்து சைபர் அனலிஸ்ட் ஆக அபுதாபியில் பணிபுரியும் மணமகனுக்கு நன்றாக படித்த நல்ல குணமுடைய மணமகள் தேவை. மணமகனின் பெற்றோர் தற்பொழுது தமிழ்நாட்டில் வசிக்கின்றனர். எல்லா மாவட்ட தமிழர்களும் விரும்பத்தக்கது.

**+918610458541 (வாட்ஸ்அப், வைபர்)**
**077 055 6685 - இலங்கை**

## வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் அம்மாச்சி உணவகத்திற்கு அண்மையில் மூன்று பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
**077 978 9571, 071 427 5364**
(தரகர் தேவையில்லை)

## ஆதனவரி வருமான சேகரிப்பிற்கான நடமாடும் சேவை தொடர்பான அறிவித்தல்

எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட பளைநகரம், புலோப்பளை மேற்கு, கச்சார்வெளி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி பளை நகர வட்டாரத்திற்கான 2024 ஆம் ஆண்டு நான்காம் காலாண்டுக்கான ஆதனவரி அறவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தவகையில் குறித்த வட்டாரத்தின் ஆதன வரிவருமான சேகரிப்பினை மேற்கொள்ளும் பொருட்டு பெரியபளை சனசமூக நிலையம், புலோப்பளைமேற்கு கிராம சேவையாளர் அலுவலகம், கச்சார்வெளி கிராமசேவையாளர் அலுவலகம் ஆகிய இடங்களில் நடமாடும் சேவை ஒன்றினை எதிர்வரும் 19.11.2024 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 வரை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே குறித்த நடமாடும் சேவையில் பளைநகர வட்டாரத்தில் அமைந்துள்ள அனைத்து ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான வரியினை செலுத்துமாறு கேட்டுக்கொள்வதுடன் இதுவரை ஆவணங்களை சமர்ப்பிக்காத ஆதன உரிமையாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான உறுதி, 30வருட தோம்பு, மற்றும் நிலஅளவைப்படம், அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகளை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் ஆதனவரி அறவீடு தொடர்பான மேலதிக தகவல்களை நேரடியாகவும் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,பளை.**

(சி-1596)

## கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு தற்காலிக பதவி வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரல்

கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தில் வெற்றிடமான பின்வரும் பதவிகளிற்கு தற்காலிக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தினை ரூபா 20/- செலுத்தி பெற்று பூரணப்படுத்தி அத்துடன் பிறப்புச்சான்றிதழ், கல்விச் சான்றிதழ் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட்டு எதிர்வரும் 30.11.2024 ஆம் திகதிக்கு முன்னராக தலைவர், கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் அனுப்பி வைக்கவும்.

கரைதுறைப்பற்று பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை.

வதிவிடச்சான்றிதழ் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கவும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**பதவி :- கிளை முகாமையாளர்**

**கல்வித்தகைமை:**

கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, மூன்று திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**பதவி:- எரிபொருள் நிரப்புனர்**

**கல்வித்தகைமை:**

கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/ 08ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**பதவி:- சாரதி**

**கல்வித்தகைமை:**

05ஆம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து/ லொறி/ பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**பதவி:- லொறிச் சுத்திகரிப்பாளர்**

**கல்வித்தகைமை:**

05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**திரு.க.ஜெயசிங்கம், தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு**

(சி-1601)

## இராசிபலன்

17.11.2024
கார்த்திகை 02, ஞாயிற்றுக்கிழமை
துதியை பின்னிரவு 12.03 மணிவரை

ரோகிணி முன்னிரவு 8.31 மணிவரை
சுபநேரம் 9.08-10.38 மணிவரை
இராகுகாலம் 4.38-6.08 மணிவரை

சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி

**வளவன்**



சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.



பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப உறவுகளிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.



அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, துயரங்கள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.



புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தேவைகள் பூர்த்தியாகும்.



வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியத்தில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பல நாட்களாக சந்திக்காத நபர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.



செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.



தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.



பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், போசன சுகமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.



சுப காரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.



தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்



இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.



பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**உழைப்பே எல்லா விதமான குறைகளையும் தடைகளையுமே வெல்லக்கூடிய சிறந்த சாதனம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள முன்னேற்றத்தை புதிய ஆட்சியில் எதிர்பார்க்கின்றோம்

## கனேடிய தமிழர் பேரவை கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் நீதி, நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தியை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க தயாராக உள்ளது. இந்த புதிய ஆட்சியில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை எதிர்பார்க்கிறோம் என கனேடிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

கனேடிய தமிழர் பேரவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தங்களின் மகத்தான வரலாற்று வெற்றிக்கு கனேடிய தமிழர் பேரவையின் வாழ்த்துக்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அகற்றிவிட்டு, ஜனநாயகத்திற்கும் தமிழ் மக்கள் உட்பட அனைத்து சமூகத்தினரின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு முன்னுரிமையளிக்கும் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி முன் இருக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பத்தை இக்கடிதம் எடுத்துக்காட்டுகிறது. தேர்தல் அறிக்கையின் மூலம், நீண்டகால குறைகளை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகளை எடுக்கும்போது, அனைவருக்கும் நீதி, உள்ளடக்கம் மற்றும் சமத்துவத்தை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் எஞ்சியுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிப்பதன் மூலம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவது தேசிய நலன் மற்றும் ஒற்றுமைக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வது ஒரு நியாயமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு முக்கியமான படியாக இருக்கும்.

தற்போது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனியாருக்குச் சொந்தமான காணிகளை மீள வழங்கப்படுவதுடன், சட்டவிரோத காணி சுவீகரிப்புகளை நிறுத்துவது நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் நியாயமான உரிமைகளை ஆதரிப்பதற்கும் இன்றியமையாததாகும்.

வழிபாட்டுத் தலங்கள் மீதான அத்துமீறலைத் தடுப்பதன் மூலமும், தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் புதிய பௌத்த விகாரைகள் கட்டப்படுவதை நிறுத்துவதன் மூலமும் தமிழர் வழிபாட்டு உரிமைகளை நிலைநாட்டுமாறு உங்கள் அரசை வலியுறுத்துகிறோம்.

புதிய அரசியலமைப்பு அங்கீகரிக்கப்படும் வரை, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல் ஆகியவை பிராந்திய ஆளுகையை வலுப்படுத்துவதற்கும் உள்ளூராட்சிப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்குமான முக்கியமான நடவடிக்கைகளாகும்.

இன்னும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புத் துறையைச் சீர்திருத்தம் செய்து, நாட்டின் மற்றைய பகுதிகளுடன் ஒத்துப்போகும் நிலைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.இராணுவத்தால் நடத்தப்படும் பண்ணைகள், ஹோட்டல்கள் மற்றும் பேக்கரிகள் போன்ற வணிக நடவடிக்கைகளில் இராணுவத்தின் ஈடுபாடு உள்ளூர் நிறுவனங்களை முடக்குகிறது. உள்ளூர் வணிகங்கள் மற்றும் விவசாயிகள் நியாயமான முறையில் ஈடுபடுவதை அனுமதிக்க இந்த முயற்சிகளை நிறுத்துமாறு உங்கள் அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். இவற்றை நீங்கள் செய்து முடிப்பீர்கள் என கனேடிய தமிழர் பேரவை நம்புகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# இயம சம்ஹார உற்சவம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாச நாத சுவாமி திருக்கோயிலில் ஐப்பசி கடைசி வெள்ளியை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை கால (இயம) சம்ஹார உற்சவம் நடைபெற்றது. (நி-8-33)

## நாட்டார் இசையில்

# வற்றாப்பளை மகாவித்தியாலயம் முதலிடத்தினை பெற்றுள்ளது




(முல்லைத்தீவு)

அகில இலங்கை கர்நாடக சங்கீத தேசிய மட்ட போட்டியில் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயம் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற நாட்டார் இசைப் போட்டியில் இப்பாடசாலை முதலிடத்தினை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 09 - 09 - 1944



மறைவு 15 - 11 - 2024

எமது நண்பன் ச.சத்தியன் அவர்களின் அன்புத்தந்தையார்

## அமரர் திரு. வைத்திலிங்கம் சச்சிதானந்தம்

(பிறப்பிடம்-அச்சுவேலி, வாழ்விடம் கரவெட்டி மற்றும் அவுஸ்திரேலியா-சிட்னி)

**அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்**
**யாழ்.இந்துக் கல்லூரி 2002 உயர்தரப் பிரிவு நண்பர்கள்**

(24421)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 120 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 350 | 200-250 | 250 |
| தக்காளி | 300 | 350 | 300 | 260 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 240 | 100-170 | 150 |
| கோவா | 200 | 220 | 250 | 300 | 300 |
| கரட் | 150 | 250 | 250 | 200 | 300 |
| பூசணி | 100 | 100 | 280 | 100-110 | 160 |
| புடோல் | 180 | 180 | 120 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 150 | 60-80 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 250 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 250 | 300 | 320 |
| பாகற்காய் | 600 | 550 | 450 | 500 | 800 |
| வெண்டக்காய் | 100 | 100 | 120 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 160 | 120 | 200 |
| பயற்றங்காய் | 200 | 180 | 180 | 150-200 | 200 |
| லீக்ஸ் | 200 | 300 | 250 | 300 | 400 |
| பீற்றூட் | 150 | 160 | 180 | 100 | 300 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 400 | 150-200 | 600 |
| போஞ்சி | 350 | 550 | 450 | 360 | 800 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 400 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 120 | 40-70 | 150 |
| தேசிக்காய் | 400 | 800 | 400 | 600-700 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-165 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 620 | 1600 |
| வெங்காயப்பூ | -- | 450 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 60 |
| ஈரப்பலா | 100 | 160 | 60 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 467
Viber 076 636 3378



# மக்களின் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு!


# மக்களின் வெறுப்பு மகா வெறுப்பு!


சிவஞானம் சிறீதரன்


இளங்குமரன்



அர்ச்சுனா


துரைராசா ரவிகரன்


செல்வம் அடைக்கலநாதன்


ஸ்ரீபவானந்தராஜா


ரஜீவன்


கஜேந்திரகுமார்


திலகநாதன்


ஜெகதீஸ்வரன்

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத் தேர்தல் கடந்த 14 ஆம் திகதி மிகவும் அமைதியான முறையில், ஜனநாயகத்தை நிலை நாட்டும் வகையில் நடந்து முடிந்தது.

நாடு முழுவதும் மொத்த வாக்குப் பதிவு 65 சதவீதமாகக் காணப்பட்டது. இது ஓரளவுக்கு திருப்தியளிக்கும் வாக்குப் பதிவாகக் கருத முடியும்.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத அமோக வெற்றியை தேசிய மக்கள் சக்தி (NPP) பெற்றிருக்கிறது.

அநுர அலை, பாராளுமன்றத் தேர்தலில் அநுர சுனாமியாய் எழுந்தது என்றே கூற வேண்டும். அந்தளவிற்கு தேசிய மக்கள் சக்தியின் வெற்றி இமயம் போல எழுந்து நிற்கிறது.

இலங்கையில் அனேக தேர்தல் தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தி முன்நின்றதை மக்களின் மாற்றத்திற்கான தேர்தலாக இத் தேர்தலை பார்க்க முடிகிறது. வடக்கு கிழக்கு தேர்தல் களத்தை எடுத்துக் கொண்டால் தமிழ் மக்களின் மனங்களிலும் மாற்றம் ஏற்பட்டு விட்டதை இத்தேர்தல் பாடம் புகட்டி நிற்கிறது.

வடக்கு கிழக்கில் மொத் தம் 28 பாராளுமன்ற ஆசனங்கள். இதில் 12 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி (NPP) கைப்பற்றி இருக்கிறது. யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் முதல் மூன்று இடத்திலும் தேசிய மக்கள் சக்தி இருப்பது கவனிக்கத்தக்க விடயம்.

தமிழ் தேசியக் கட்சிகளைத் தவிர்த்து மக்கள் ஏன் மாற்றத்திற்கு வாக்களித்துள்ளார்கள் என்பதை உணர பெரிதாக ஏதும் சிந்திக்கத் தேவையில்லை. தமிழ் மக்களின் இப்போதைய நிலை ஊழலற்ற, மக்களுக்கு சேவை செய்யக் கூடியவர்களே. அதன் நீட்சியே தமிழ் தேசியக் கட்சிகள் மண் கௌவக் காரணமாக அமைந்தன.

> ❝ தமிழ் தேசியக் கட்சிகளைத் தவிர்த்து மக்கள் ஏன் மாற்றத்திற்கு வாக்களித்துள்ளார்கள் என்பதை உணர பெரிதாக ஏதும் சிந்திக்கத் தேவையில்லை. தமிழ் மக்களின் இப்போதைய நிலை ஊழலற்ற, மக்களுக்கு சேவை செய்யக் கூடியவர்களே. அதன் நீட்சியே தமிழ் தேசியக் கட்சிகள் மண் கௌவக் காரணமாயின.

அத்துடன் தமிழ் மக்களின் விருப்பம் எது என்பதை உணராமல் தமது சொந்த நலனுக்காக செயற்பட்டன தமிழ் தேசியக் கட்சிகளும் அதன் தலைமைகளும் என்று கூறினால் அதை எவரும் மறுத்துவிட முடியாது.

அந்தளவிற்கு தமிழினம் தமிழ் தேசியக் கட்சிகளை நம்பி ஏமாந்ததே மிச்சம் என்ற நிலையில், நாட்டில் ஊழலை இல்லாதொழிப்பேன் என்ற கோசத்துடன் அநுர வந்தார். அவரின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தின. அதுவே இன்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் படுதோல்விக்குக் காரணம் எனலாம்.

இதில் தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான முடிவுகளும் தமிழர்களையும் தமிழர் பலத்தையும் பலவீனப்படுத்தின என்பதை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

தமிழீழ விடுதலை புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டை உடைக்கவல்ல சிந்தனை தமிழரசுக் கட்சியின் தலைமைக்குள் எழுந்ததற்கான காரணம் இன்றுவரை புரியாததாயினும், அந்த முடிவே தமிழினத்தின் பலவீனத்துக்கான காரணம் என்பதை இங்கு ஆணித்தரமாக் கூறி விட முடியும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒற்றுமையின் கூட்டை உடைத்து வெளியேறுகிறது தமிழரசுக் கட்சி என்ற அறி வித்தலின் அடுத்த கணமே தமிழினத்தின் ஒற்றுமை குலைக்கப்பட்டு விட்டது.

ஒரு தேசிய இனம் தனது ஒற்றுமையை இழக்குமானால் அது பாரிய விளைவுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தும் என்பதை நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் கற்பித் திருக்கிறது.

தமிழ் தேசியக் கட்சிகளின் பிளவு, அதனூடான தோல்வி என்பன சர்வதேசத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது என்ற உண்மை தமிழ் மக்களுக்குத் தெரியாத விடயம்.

ஆம், வன்னிப் பெரு நிலப் பரப்பில் நடந்த இன அழிப் பிற்கோ, போர்க்குற்ற மீறல்களுக்கோ இனி ஒரு போதும் நீதி கிடைக்கும் என்று நாம் கனவு காணக்கூடாது.

ஏனெனில் வடக்கு கிழக்கில் பெரும்பாண்மையாக வெற்றி பெற்றது பெரும்பாண்மை சார்ந்த ஒரு கட்சியே.

இதன்பின் சர்வதேசத்திடம் யாரும் போய் தமிழினத்துக்கு நடந்த அநீதிகளுக்கு நீதி வேண்டும் என்று கேட்கமுடியாது.

ஏனென்றால் அதை உரத்து, அழுத்திக் கேட்பதற்கு யாரும் இல்லை என்பது தான் உண்மை.

ஆக, பெரும்பாண்மை கட்சிகளை வெல்ல வைத்ததனூடாக நாம் எமக்கான நீதியை பெறும் வழியைக் சுருக்கியுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது நம்பிக்கை இழந்ததனாலேயே தமிழ் மக்கள் பெரும்பாண்மை கட்சியின் பக்கம் சாய்ந்தனர் எனின் இதில் தவறு யார் பக்கம் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் கொடுக்கும் வாக்குறுதிகளை நம்பி தமிழினம் ஒரே முகங்களை திரும்பத் திரும்ப பாராளுமன்றம் அனுப்பி பயன் எதையும் காணாத நிலையில் புதியவர்களை நாடிச் சென்றது.

தவிர, ஒற்றுமையை தமிழினம் விரும்பியதாயினும் அந்தச் சிந்தனை அவர்களிடத்தே இம்மியும் இருக்கவில்லை என்பதையும் நன்கு புரிந்து கொண்டு விட்டது.

இப்போது தமிழர்களுக்கு ஊழலற்ற, எங்கள் பிரச்சினைக் கேட்கவல்ல, அதை சரிசெய்ய வல்லவர்களே தேவை.

அது தமிழ் தேசியக் கட்சிகளிடம் இல்லை என்றான பின்பு எப்படி அவர்களை மீண்டும் மீண்டும் தெரிவு செய்ய முடியும்?

இதன் தாக்கம் தென்றலாய், புயலாய், பாரிய சூறாவளியாய் வீசி ஓய்ந்திருக்கிறது.

இந்தச் சூறாவளிக்குள் சிக்குண்ட தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் புல சின்னாபின்னமாகி விட்டன.

இந்த உண்மையை உணராமல் மீண்டும் மீண்டும் அதே பழைய பல்லவியை பாடினால் அது தமிழ் மக்களிடத்தே எடுபடாது. இனி தமிழினத்தின் உரிமை பிரச்சினைகளும் சர்வதேச தளத்தில் எடுபடாது.

இதைத் தான் "ஒன்றை இழந்து இன்னொன்றைப் பெறுவது" என்பார்கள் போலும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பில் ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் கருத்துக் கூறுவது வழமை.

அந்த வகையில நடந்த பொதுத்தேர்தல் முடிபுகள், அதிலும் குறிப்பாக எங்கட தமிழ்த் தேசத்தின்ர தேர்தல் முடிவுகள் குறித்து ஒவ்வொரு உறுப்பினர்களும் தனித்தனியாகத் தங்கள் கருத்துக்களை முன்வைப்பர்.

இதில முதலாவதாக விதானையார் விசுவலிங்கம் தன்ர கருத்தை முன்வைப்பார் என வாத்தியார் அறிவித்தார்.

**விதானையார்:-** அனைவருக்கும் வணக்கம். ஜனாதிபதி அநுர குமாரதிஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி வரலாறு காணாத வெற்றியைத் தனதாக்கியுள்ளது.

2020 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் வெறும் இரண்டு ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்த தேசிய மக்கள் சக்தி 2024 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் 159 ஆசனங்களைப் பெற்றிருப்பது மிகப் பெரும் சாதனை.

அந்தச் சாதனைக்கு நாங்களும் எமது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்தகால ஆட்சியாளர்கள் எங்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் துரோகம் இழைத்தனர்.

அதன் காரணமாக சிங்கள மக்கள் அவர்கள் மீது வெறுப்புக் கொண்டனர்.

அதன் விளைவு தான் அநுரகுமார திசாநாயக்கவை அந்த மக்கள் ஜனாதிபதி ஆக்கினர்.

அதிலும் ஒரு விடயத்தை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

அதாவது ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வாக்களித்த சிங்கள மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவாக அவரின் தேசிய மக்கள் சக்திக்கு தங்கள் வாக்கை வழங்கியுள்ளனர்.

இதிலிருந்து அரசியலில் சிங்கள மக்கள் மிகவும் தெளிவாக உள்ளனர் என்பது தெரிகிறது.

அநுரவை ஜனாதிபதியாக்கினால் மட்டும் போதாது, பாராளுமன்ற ஆட்சியை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

அப்போது தான் ஜனாதிபதி அநுராவால் ஊழலை ஒழிக்கவும் அரசியலமைப்பை மாற்றியமைக்க முடியும் என்று தீர்மானித்தனர்.

அந்தத் தீர்மானத்தை அவர்கள் செய்தும் காட்டியுள்ளனர். இனி ஜனாதிபதி அநுரவின் கையிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

**வாத்தியார்:-** கருத்துரை வழங்கிய விதானையார் விசுவலிங்கத்திற்கு நன்றிகள். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் அவர்கள் தேர்தல் குறித்த தனது கருத்தை முன்வைப்பார்.

**பண்டிதர்:-** நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள் தென்பகுதியில் மட்டும் ஆச்சரியம் தருவதாக இல்லை.

மாறாக, எங்கள் வட மாகாணத்திலும் தேர்தல் முடிவுகள் ஆச்சரியமானவை. அந்த முடிவுகள் எங்களின் கடந்த அரசியல் வரலாற்றை அப்படியே புரட்டிப் போட்டுள்ளது.

ஒரு காலத்தில் இந்த நாட்டின் தேசியக் கட்சிகள் வட மாகாணத்தில் ஆசனங்களைப் பெற முடியாமல் தோற்றன.

இடையிடையே ஒரு சில தமிழர், தேசியக் கட்சிகள் சார்பில் பாராளுமன்றம் சென்றிருந்தாலும் தமிழர் தேசத்தில் தமிழ்க் கட்சிகளே ஒட்டு மொத்தப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் பெற்றிருந்தன.

ஆனால் 2024 இல் அந்த வழமையும் மரபும் அடியோடு வெட்டிவிழுத்தப்பட்டு, அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மூன்று ஆசனங்களையும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

தமிழ்க் கட்சிகள் படுதோல்வி கண்டுள்ளன. அதேநேரம் தென்பகுதியில் அஸ்தமித்துப்போன நீண்ட நெடுங்காலத்து அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு கொடுத்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இம்முறை தோல்வி கண்டுள்ளனர்.

ஆகையால் இது மாபெரும் அரசியல் மாற்றம். தென்பகுதியில் சிங்கள மக்கள் எவ்வாறு அரசியல் மாற்றத்தை விரும்பினார்களோ அதே விருப்பம் வட பகுதித் தமிழ் மக்களிடமும் இருந்துள்ளது.

அதிலும் சிங்கள மக்களும் வட பகுதித் தமிழ் மக்களும் ஒரே நேர் கோட்டில் சிந்தித்துள்ளனர்.

அந்தச் சிந்தனையின் வெளிப்பாடாக ஒட்டு மொத்த நாட்டு மக்களும் இன, மத, மொழி பேதமின்றி அநுரகுமார திஸாநாயக்கவின் ஆட்சிக்கு வலுச் சேர்த்துள்ளனர்.

இப்பேற்பட்ட அரசியல் வரலாறு இந்த நாட்டில் முன்னெப்போதும் நிகழ்ந்ததில்லை. ஆகவே இந்த நாட்டு மக்கள் தனக்கு வழங்கிய ஆணையை ஜனாதிபதி அநுர சிறப்பாக ஆற்றி, இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்து இலங்கைத் திருநாட்டை சமாதான பூமியாக ஆக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

**வாத்தியார்:-**

பண்டிதருக்கு நன்றி. தொடர்ந்து சாத்திரியார் சதாசிவம் தனது கருத்தை முன்வைப்பார்.

**சாத்திரியார்:-** தமிழ் அரசியலில் நீண்ட நெடுங்காலத் தொடர்புடைய எனக்கு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட முடிவுகள் மிகப்பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளன.

எனினும் அந்தத் தீர்ப்பை வழங்கியவர்கள் நம் தமிழ் மக்கள். எமது தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்புகள் ஒருபோதும் பிழைத்ததில்லை என்பது எனது பட்டறிவு.

எனவே மிகவும் அமைதியாக இருந்து ஆழமாகச் சிந்தித்து தமது வாக்குகளை அநுர குமார திஸாநாயக்கவுக்கு வழங்குவது என்று தீர்மானித்த எம் தமிழ் மக்களின் ஆற்றலை வியந்து கொள்கின்றேன்.

இதுகாறும் எங்களை ஏமாற்றிய எங்கள் தமிழ் அரசியல் வாதிகளுக்கு நாம் காலா காலமாக வாக்களித்துக் கண்டது என்ன பயன்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலின் போதும் எங்களிடம் வருகின்ற தமிழ் அரசியல்வாதிகள், தாம் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை.

அதேநேரம் தாம் வழங்கிய வாக்குறுதிகள் என்ன என்பதையே அவர்கள் மறந்து போவர்.


இது தவிர, தேர்தல் பிரசாரத்திற்கென புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளிடமும் தமிழ் மக்களிடமும் தமிழர் சார்ந்த தொழில் நிறுவனங்களிடமும் ஏகப்பட்ட பணத்தை வாங்கிக் கொண்டு மிகச் சிறு தொகையை மட்டும் தேர்தல் செலவுக்கு எடுத்துவிட்டு, மிகுதியான பெருந் தொகைப் பணத்தை தாமே எடுத்துக் கொள்கின்ற அரசியல் வியாபாரத்தில் சில தமிழ் அரசியல் தரப்புகள் ஈடுபட்டுள்ளதோடு, எங்களை ஏமாற்றுகின்றன.

இவ்வாறு ஏமாற்றுகின்ற எங்கள் அரசியல்வாதிகளை விட, ஒரு நல்ல ஆட்சியை வழங்கவும் ஊழலை ஒழிக்கவும் அரசியல்வாதிகளின் மோசடிகளைத் தடுக்கவும் முன்வந்துள்ள அநுர குமார திஸாநாயக்கவுக்கு எமது ஆதரவை வழங்குவது தான் சரியான முடிவு என்று எங்கள் மக்கள் தீர்மானித்தனர்.

அதனால் தான் அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தியில் யாழ். மாவட்டம் மற்றும் வன்னி மாவட்டத்தில் யார் போட்டியிடுகின்றனர் என்று இம்மியும் பார்க்காமல் தங்கள் வாக்கை ஜனாதிபதி அநுரவுக்கு வழங்குவதாக மட்டும் நினைத்து தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களித்தனர்.

எனவே தமிழ் மக்களின் இந்த வாக்களிப்பு தென்பகுதிக்கு தமிழ் மக்கள் அனுப்பிய சமாதானத் தூது. இதனை ஜனாதிபதி அநுர கருத்தில் கொண்டு தமிழ் மக்களின் தீராத் துன்பத்தை தீர்த்து வைக்க வேண்டும்.


தமிழ் இனத்தை அழித்த துரோகிகளைத் தூக்கிலிட வேண்டும் எனக் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## ஒரே நேர்கோட்டில் சிந்தித்த தமிழ், சிங்கள மக்களைப் பாரீர்


**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.நா திணிப்பை ஏற்க முடியாது என்கிறதே அரசு?



அன்புமிகு வியாசரே எம் தமிழ் கலாசாரம் எங்கே போகிறது?

**குமார் முகமாலை**

**கனடா, பிரான்ஸ், சுவிஸ் ஊடாக தமிழ் தேசியம் வளருமா வியாசரே?**

புலம்பெயர் தேசத்து உறவுகளின் உழைப்பின் உன்னதமே தமிழினம் கஞ்சியேனும் குடிக்க காரணம் என்பதை எவரும் மறுத்துவிடவோ மறந்துவிடவோ முடியாது.

ஆயினும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களைத் தீர்மானிக்கும் சக்தியாக புலம்பெயர் உறவுகள் இருப்பதை ஒரு நாளும் ஏற்க முடியாது. அது ஒரு ஆரோக்கியமான விடயமாகவும் இருக்காது.

தமிழ் தேசியம் உயிர்ப்புடன் இருக்க காரணம் புலம்பெயர் உறவுகள் என்ற மகத்தான உண்மையை தமிழினம் புரிந்து வைத்திருக்கின்றதாயினும் தமிழர்களின் இருப்பைத் தீர்மானிக்கும் சக்தியாக புலம்பெயர் தேசம் இருப்பது தமிழினத்திற்கு ஆரோக்கியமானதன்று. இதுவே உண்மையானது.

**சுதன் குப்பிழான்**

**வென்றவர்களை ஆட்சி செய்ய விடாமல் தோற்றவர்கள் அனுபவசாலிகளை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்பது எதற்காக வியாசரே?**

கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாகச் செயற்பட்டவர்கள் அரசையும் அரசின் திட்டங்களையும் பலமாக எதிர்த்தனர்.

இப்போது எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் ஆட்சி பீடம் ஏற, ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் எதிர்க் கட்சியாகியுள்ளனர்.

இது வளமையான சுழற்சியே.

அதுசரி அனுபவமுள்ளவர்கள்தான் நாட்டை ஆட்சி செய்ய வேண்டும் என்று கூறுவது எந்த வகையில் நியாயமானது? மக்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்களே ஆட்சி பீடத்தில் இருக்கலாம். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் எப்படி அனுபவசாலிகளாக இருப்பார்கள் சொல்லுங்கள்?

**இளங்கோ மானிப்பாய்**

**எளிமையான, சோரம்போகாத தலைவரை சிங்கள மக்கள் தெரிவு செய்ததுபோல நாமும் ஒரு தலைவரை தெரிவு செய்ய முடியாத வியாசரே?**

எமக்கான தலைமை 2009 உடன் இல்லாது போய்விட்டது. இப்போது இருப்பவர்கள் எவரும் தமிழினத்தின் தலைவராவதற்கு எந்த அருகதையும் இல்லை என்பதுதான் உண்மை.

இதை இங்கு நாம் கூறும் போது பலருக்கு கோபம் உச்சத்துக்கு ஏறும். அதில் பயன் ஏதும் இல்லை. நான் கூறியது எனது கருத்தல்ல. ஒட்டுமொத்த தமிழினத்தின் கருத்தையே கூறினேன்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மதுவன் மீசாலை**

**தமிழரசுக் கட்சியும் தமிழ்தேசிய மக்கள் முன்னணியும் ஒன்று சேர்ந்தால் எப்படி இருக்கும்?**

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட வெடிப்பினால் அக்கட்சி பல கட்சிகளாகப் பிரிந்து நின்று செயற்படுகின்றன. தமிழ் தேசிய மக்கள் முன்னணி மணிவண்ணனுடனான முரனினூடாக குறிப்பிட்ட பிளவைச் சந்தித்து நிற்கிறது.

இப்பேற்ப்பட்ட நிலையில் இருகட்சிகளும் ஒன்று சேர்வது ஆரோக்கியமான ஒன்றல்ல அத்துடன் அவ்வாறான அதிசயம் நடக்க வாய்ப்புக்களும் இல்லை.

ஏன் நாம் வீண் கற்பனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**ஈஸ்வரன் உரும்பிராய்**

**அன்புமிகு வியாசரே எம் தமிழ் கலாசாரம் எங்கே போகிறது?**

எமது கலாசாரம் என்பது எமது வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்தது. அந்த வாழ்வியலில் மாற்றம் ஏற்படும் போது அது கலாசாரப் பிறழ்வை ஏற்படுத்தியே தீரும்.

அப்படிப்பட்ட அநியாயமே இப்போது தமிழ் இனத்தின் கலாசாரத்திற்கு நடந்து கொண்டிக்கிறது.

எம் கலாசாரத்தின் வண்டவாலத்தை அறிய மாலை 5 மணிக்குப் பின் பண்ணைப்பக்கம் சென்று பார்த்தால் தெரியும்.

**எஸ்.கே, யாழ்ப்பாணம்**

**ஐ.நா திணிப்பை ஏற்க முடியாது என்கிறதே அரசு?**

பெரும்பான்மை ஆட்சியாளர்கள் எவரும் தமிழினத்துக்கான நீதியைப் பெற்றுத்தரப் போவதில்லை.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் அவர் வந்துவிட்டார், இவர் வந்துவிட்டார் இனி எமக்கு நீதி கிடைக்கும் என்று நாம் பகல் கனவு காணக் கூடாது.

சிங்களவர்களுக்கும் சிங்களத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நடந்து கொள்வதே பெரும்பான்மையின் ஆட்சி.

இதைப் புரியாமல் நாம் புலம்புவதில் பயனேதும் இல்லை.

**தூரி நவிண்டில்**

**மூட நம்பிக்கைகளை நம்பலாமா வியாசரே?**

பல காலமாக மூட நம்பிக்கைகள் என்று கூறப்பட்டவை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட சில விடயங்கள்.

மக்கள் ஒன்று கூடும் நன்மை, தீமை நிகழ்வுகளில் தென்னை- ஓலை தோரணம் கட்டுதல் - தென்னை ஓலையில், கிருமிகளை அகத்துறிஞ்சும் தன்மை அதிகம் உண்டு.

இறந்தவரை தென்னை ஓலை பன்னாங்கில் படுக்க வைத்தல் இதற்கும் இதுவே காரணம். வாரத்தில் ஒரு முறையேனும் வீட்டை மஞ்சள் நீர் கொண்டு சுத்தம் செய்தல் மஞ்சள் மிகச் சிறந்த கிருமி நாசினி.

நெற்றியில் திருநீறு அணிதல், சந்தனப் பொட்டு வைத்தல், உடலில் சந்தனம் பூசுதல் இவ்வாறு மெஞ்ஞானத்திற்குள் பல விஞ்ஞான விளக் கங்கள் உண்டு.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய விடயங்களுக்கு இப்போதே விஞ்ஞானம் விளக்கம் தருகிறது.

**சுரேசன் பத்தமேனி**

**உலக நாடுகளின் பொருளாதார நெருக்கடிக்கு அதீத சனத்தொகைப் பெருக்கம், பெற்றோலியத்திற்கான கேள்வி, தொழில் முனைவு குறைவு ஊழல் மோசடிகள் போன்றன காரணமா வியாசரே?**

நிச்சயமாக அதுவே உண்மை. இதில் ஒரு விடயத்தை விட்டு விட்டீர்கள் சுரேசன்.


உலக நாடுகள் தம்மை வல்லரசாகக் காட்டிக் கொள்வதற்காக அணுச்சோதனைகளை மேற்கொண்டு கொண்டே இருக்கின்றன.

அத்துடன் அதி நவீன போர் கலங்களைத் தயாரித்துக்கொண்டே இருக்கின்றன.

இவற்றை பரிசோதிக்க ஒரு களம் தேவை. அந்தக் களத்தை ஏதோ ஒரு வகையில் உருவாக்கிக்கொண்டே இருக்கிறார்கள்.

உலகின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கியமான காரணி இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்ரேலின் வான் பாதுகாப்புக் கவசங்கள் எப்படிச் செயல்படுகின்றன?

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மீடியம் ரேஞ்ச் பாலிஸ்டிக் ஏவுகணை இது. ஈரான் நாடு தயாரித்து ஹிஸ்புல்லா அமைப்புக்கு அழித்த காதர்-1 ரக ஏவுகணை இது என்று பிற்பாடு இஸ்ரேல் குற்றம் சாட்டியது.இந்த ஏவுகணை 700 கிலோ வெடிபொருட்களைச் சுமந்து சென்று பேரழிவை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தது. இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவ் புறநகர்ப் பகுதியில் இருக்கும் மொசாட் தலைமையகத்தை குறிவைத்து ஏவப்பட்டது இது.

இதுபோன்ற ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் வல்லமை அயர்ன் டோமுக்குக் கிடையாது. கத்தியுடன் களத்துக்கு வரும் சின்னச் சின்ன ரௌடிகளை டீல் செய்யும் ஏட்டய்யா, இன்டர்நேஷனல் கிரிமினலை டீல் செய்ய முடியாது இல்லையா! அப்படி வஸ்தாது ஏவுகணைகளை அழிப்பதற்காக டேவிட்ஸ் ஸ்லிங் என்ற வான் பாதுகாப்பு வளையத்தை வைத்திருக்கிறது இஸ்ரேல். இதுதான் ஹிஸ்புல்லாவின் அந்த ஏவுகணையை வானில் வீழ்த்தியது.

இதேபோல 2023 மே மாதத்தில் காசா பகுதியிலிருந்து பாலஸ்தீன இஸ்லாமிக் ஜிகாத் என்ற குழு 1,100 ஏவுகணைகளை இஸ்ரேல் மீது தாக்கியது. இவற்றில் 96% ஏவுகணைகள் வானிலேயே இடைமறித்து அழிக்கப்பட்டன. இதையும் செய்தது டேவிட்ஸ் ஸ்லிங்தான்.

### 300 கி.மீ தூரம் வரை பாய்ந்து எதிரிகளின் ஏவுகணைகளை அழிக்கும்! ஒன்றின் மதிப்பு, இத்தனை லட்சம் அமெரிக்க டொலர்களா?

100 கி.மீ தூரம் முதல் 200 கி.மீ தூரம் வரையிலிருந்து ஏவப்படும் நடுத்தர ரக பாலிஸ்டிக் ஏவுகணைகளை வானில் இடைமறித்து அழிக்கும் அமைப்பு டேவிட்ஸ் ஸ்லிங். இது 2017ஆம் ஆண்டு செயற்பாட்டுக்கு வந்தது.

இஸ்ரேல் அரசின் ரஃபேல் அட்வான்ஸ்டு டிஃபன்ஸ் சிஸ்டம்ஸ் இதை உருவாக்கியது. இதற்குத் தொழில்நுட்ப உதவிகளை அமெரிக்காவின் RTX Corp என்ற ஆயுதத் தொழில்நுட்ப நிறுவனம் அளித்தது. அயர்ன் டோம் மாதிரியேதான் இதன் செயற்பாடும் இருக்கிறது. அயர்ன் டோமில் இருக்கும் டாமிர் ரக ஏவுகணைகளுக்கு பதிலாக இதில் ஸ்டன்னர் ரக ஏவுகணைகள் இருக்கும். இது 300 கி.மீ தூரம் வரைகூட பாய்ந்து எதிரிகளின் ஏவுகணைகளை அழிக்கும் வல்லமை பெற்றது. இது 92% துல்லியமாக செயற்படுவதாக இஸ்ரேல் சொல்கிறது. டேவிட்ஸ் ஸ்லிங்கில் இருக்கும் ஸ்டன்னர் ஏவுகணை ஒன்றின் மதிப்பு 10 லட்சம் அமெரிக்க டாலர்.

### ஆரோ 2 மற்றும் ஆரோ 3 ஆக்ஷன் ஆரம்பம்!

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தபோது முதல் வளைகுடா போர் வெடித்தது. அந்த 1991 காலகட்டத்தில் குவைத்துக்கு ஆதரவாகப் போரில் குதித்தது அமெரிக்கா. அப்போது அமெரிக்காவுக்கு இஸ்ரேல் உதவியது. அந்த நேரத்தில் இஸ்ரேலை மிரட்ட ஸ்கட் ஏவுகணைகளை அந்த நாட்டில் வீசித் தாக்கியது ஈராக்.வளிமண்டலத்தைத் தாண்டிச் சென்று வேகமாகப் பயணம் செய்து இலக்கை நெருங்கும்போது மீண்டும் பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்து வேகமாகப் பாயும் தன்மை கொண்டவை ஸ்கட் ஏவுகணைகள். சோவியத் யூனியன் இந்த ஏவுகணைகளை ஈராக்கிற்கு விற்றிருந்தது.

இதுபோன்ற தொலைதூரத்திலிருந்து ஏவப்படும் ஏவுகணைகளை வழியில் இடைமறித் துத் தாக்குவதற்காக ஆரோ 2 என்ற எதிர்தாக்குதல் ஏவுகணைகளை உருவாக்க அப்போதே இஸ்ரேல் தயாரானது. இஸ்ரேல் அரசு நிறுவனமான இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் இதை வடிவமைத்தது. அமெரிக்காவின் போயிங் நிறுவனம் இதன் உருவாக்கத் தில் உதவியது. கடந்த 2000 ஆவது ஆண்டே இது செயற்பாட்டுக்கு வந்துவிட்டதாக இஸ்ரேல் அறிவித்தாலும் உண்மையில் 2017ஆம் ஆண்டுதான் ஆரோ 2 ஆக்ஷனில் இறங்கியது. சிரியாவிலிருந்து வந்த தாக்குதல்களை இது வெற்றிகரமாக முறியடித்தது.

(தொடரும்...)

# ஒப்பாரி வைத்தால் லட்சங்களில் சம்பளம்

நமது கிராமப்புறங்களில் மரண வீடுகளில் இடைவிடாது ஒலிக்கும் ஒப்பாரிப் பாடல்களைக் கேட்கலாம். சீனாவிலோ இதனையே முழுநேரத் தொழிலாக ஏற்று அதன் மூலமாக ஆண்டுக்கு 25 லட்சம் வரை சம் பாதிப்பவர்கள் இருக்கிறார்கள் என் பது ஆச்சரியமாக இருக்கிறது அல் லவா?

சீனாவில் துக்கம் நிகழும் வீடுகளில் அழையா விருந்தாளிகள் இவர்கள். தகவல் தெரிந்த அடுத்த அரைமணி நேரத்தில் குறிப்பிட்ட வீட்டில் இவர் களது அழுகைக்குரல் கேட்கத் தொடங் கும்.

எந்த அளவு நாடகத்தன்மையின் றிக் கண்ணீரும் புலம்பலும் வெளிப் படுகிறதோ அந்த அளவு அவர்களது சம்பளமும் அதிகரிக்கும். படுத்து உருண்டு கத்திக் கதறி அழுது தங் களது சொந்த உறவினரே இறந்தது போன்ற தோற்றத்தை உண்டாக்கு வார்கள்.

இறுதிச்சடங்குகளில் எவ்வித இடை யூறும் செய்யாமல், அதேநேரம் சுற்றியுள்ள பலராலும் 'கனெக்ட்' செய்துகொள்ள முடியுமான அளவு இவர்களது 'அழுகை' இருக்கும்.

இப்படி துக்கத்துக்கு நேர்ந்து விட் டதால் சுபகாரியங்களில் கலந்து கொள்ள இவர்களுக்கு அனுமதி யில்லை. அது ஒரு குறைதான் என் றாலும் கிடைக்கும் லட்சங்கள் அதனை ஈடுகட்டிவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



33 செங்கை ஆழியான்

யாழ்ப்பாணத்தின் கோட்டையின் தளபதியாக கேர்னல் பார்பெற் (Barbet) என்பவன் பொறுப்பேற்றான். (1796) ஒல்லாந்தரிடமிருந்து கையேற்ற பல தேவாலயங்கள் ஆராதனையில்லாது கைவிடப்பட்டன. சுண்டுக்குழித் தேவாலயமும் அவற்றில் ஒன்றாகும். இந்தத் தேவாலயத்தை கேர்னல் பார்பெற் தனது ஆட்டுப்பட்டியை அடைப்பதற்கான ஆட்டுக் கொட்டிலாகப் பயன்படுத்தினான் என அறியப்படுகிறது.

1801 ஆம் ஆண்டு, டிசம்பர் 20 ஆம் திகதி வரை கிறிஸ்தியன் தாவீதும் பாதிரியார் இத் தேவாலயத்தில் ஆராதனை நடாத்தும் வரை இது ஆட்டுக் கொட்டிலாக விளங்கியது.


ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை முழுவதற்கும் ஒரு தேசாதிபதி நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். இலங்கை மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு அரசாங்க ஏசண்டர் நியமிக்கப் பட்டார். வட மாகாணத் திற்கு முதன்முதல் அரசாங்க ஏசண்டராக நியமிக்கப் பட்டவர் மேற் சொன்ன கேர்னல் பார்பெற் ஆவார். 1801 ஆம் ஆண்டு பதவி யேற்ற இவர் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து நிர்வாகத்தைக் கவனித்தார்.

1804 ஆம் ஆண்டளவில் கோட்டை மாளிகையை விட்டு வெளியேறி, யாழ்ப்பாண கச்சேரி வளவான பழைய பூங்காவில் தனக்கென வீடு ஒன்றினை அமைத்துக் குடியேறினார். கோட்டை மாளிகையில் அவருக்கு அடுத்த தரத்திலிருந்த மேயர் ஒருவன் குடி புகுந்தான். அந்த வருடமே யாழ்ப்பாணக் கோட்டை தனது முக்கிய நிர்வாக மையம் என்ற அந்தஸ்தை இழந்தது. 1798 ஆம் ஆண்டு கண்டி மன்னன் இராஜசிங்கன் மரணமடைந்தான்.

அரசுரிமை போட்டி ஏற்பட்டது. கண்ணசாமி என்பவன் விக்கிரம இராஜசிங்கன் என்ற பட்டப் பெயரோடு மன்னனான், அரசுரிமையாளனான முத்துச்சாமி என்பவன் தனது உறவினருடன் கொழும்புக்குத் தப்பியோடி, ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான், ஆங்கிலேயர் முத்துச் சாமியையும் அவனோடு சேர்ந்தவர்களையும் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அனுப்பி அங்கு ஒரு மாளிகையில் தங்க வைத்திருந்துள்ளனர்.1805 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது அதனால் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் சேகரித்து வைத்திருந்த 1000 மூடை அரிசி, பெரிய கடைக்கு அனுப்பப்பட்டு ஒரு மூடை 10 இறை சாலுக்கு விற்கப்பட்டது. 1806 ஆம் ஆண்டு இலங்கையின் தேசாதிபதியான நோர்த் என்பான் யாழ்ப்பாணத்திற்கு ஒரு சுற்றுப் பயணத்தை மேற் கொண்டு வந்தான் அவனும் அவனது பரிவாரமும் கோட்டை மாளிகையில் தங்கியிருந்தனர். (தொடரும்...)

# கடல் புறா

## எட்டாக் கனியும் கிட்டாக் கனியும்




காலத்தின் பதிவு 130

"இதில் தீர விசாரிக்க வேண்டிய அவசியமில்லை," என்றான் கண்டியத்தேவன் சினத்துடன்.

"ஆராய்ச்சிக்கு அவசியமிருக்கலாம்," என்றான் இளையபல்லவன். "எந்த ஆராய்ச்சிக்கு?"

"நாம் காண்பது சரிதானா என்ற ஆராய்ச்சிக்கு. "அந்த ஆராய்ச்சியும் அவசியமில்லை. நீங்கள் குடியில் மயங்கியிருந்ததை நேற்றிரவு நானே கண்டேன்," என்றான் கண்டியத்தேவன் உறுதியுடன்.

இளையபல்லவனின் இதழ்களில் இளநகை பூத்தது. "அதிகமாகக் குடித்திருந்தேனா?" என்று கேட்டான் அவன்.

"உளறினேனோ?"

"என்ன உளறினேன்?" "நமது சீன மரக்கலத்தைப் பாரதத்தின் மரக்கல மாக்கச் சொன்னீர்கள்..."

"வேறு என்ன சொன்னேன்?"

"அதிலும் ஸர்ப்பமந்திரம் வேண்டாம் மத்திய மந்திரம் வேண்டாம் அக்ரமந்திரமாக்கிவிடு என்றீர்கள்."

"வேறு என்ன சொன்னேன்?"

"அக்ரமந்திரந்தான் வேகமாகப் போகும். அக்ர மந்திரந்தான் நன்றாகப் போரிடும். அப்படி மாற்றிவிடு என்றீர்கள்."

"இப்படியா உளறினேன்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் இளையபல்லவன். "ஆம்" என்று பதில் கூறினான் தேவன்.

"அப்படியானால் தேவரே, இந்த அக்ஷயமுனையின் மதுவை நான் பாராட்டுகிறேன்." என்றான் இளையபல்லவன்.

"இதில் பாராட்ட என்ன இருக்கிறது?" எரிச்சலுடன் எழுந்தது கண்டியத்தேவன் கேள்வி.

இளையபல்லவன் நகைத்து விட்டுச் சொன்னான் "என்ன அப்படிக் கேட்கிறீர்கள் தேவரே! என் உளறலில் எத்தனை கோர்வையிருக்கிறது பார்த்தீர்களா? மரக்கலத்தை அக்ரமந்திரமாக்கக் காரணத்துடன் கூறியிருக்கிறேன். இந்த மதுவை அருந்த முற்பட்டது முதல் என் மூளை எத்தனை துரிதமாக வேலை செய்கிறது. மது அருந்தியபின் கோட்டைப் பாதுகாப்பு எத்தனை பலப்படுத்தப்பட்டிருக்கிறது. மதுவை அருந்த முற்பட்டபின் தெரியாத எத்தனை விடயங்கள் அறிவில் பளிச்சிடுகின்றன. ஆகா! எத்தனை சிறந்த மது இது. இதை ஏன் நாம் அருந்தக்கூடாது? சித்தத்தைத் துலக்கும் மது இது. மர்மங்களை உடைக்கும் மது இது. நமக்கு விழிப்பூட்டுவதும் இந்த மதுதான். வாழ்க அக்ஷயமுனை. வாழ்க அதன் மது. அதை நீங்களும் அருந்துங்கள் தேவரே. உமது மூளையும் துலக்கப்படும். விடயங்கள் பளிச்சென்று புரியும் உமக்கு."

இப்படிப் பேசிக்கொண்டே போன படைத்தலைவனை, "போதும், போதும் நிறுத்துங்கள். மது புராணத்தை," என்றான் தேவன், குரலில் கசப்பு மண்டிக்கிடக்க.

இளையபல்லவன், கண்டியத் தேவனின் சுண்டனத்தை மட்டும் செய்யாமலே மேலே தொடர்ந்தான். தேவரே! அக்ஷயமுனையின் மதுவை மட்டும் நான் அருந்தாதிருந்தால் பல விடயங்கள் என் மூளைக்கு எட்டியிருக்காது. பல மர்மங்கள் துலங்கியிருக்காது. மர்மத்தின் அஸ்திவாரங்களையும் நான் அறிந்திருக்க முடியாது. அதை அருந்தத் துவங்கினேன். அதனால் உண்டான பலன் சொல்ல முடியாது.

போகப் போக உமக்கே தெரியும் பலன் என்ன என்பது. உதாரணமாக, நம்து மஞ்சளழகி மகாராணியென்பதை உமக்கு யார் சொன்னது? நான்தானே? நான் சொல்லாவிட்டால் உமக்கு அது தெரிந்திருக்குமா? தவிர... இந்த இடத்தில் பேச்சைச் சற்று நிறுத்தினான் இளையபல்லவன்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்றல் பெண்...



நன் நாளாம் இன்நாளில்
நலம் பெற கவிதை சொல்ல
பாரதி கண்ட பெண் மனது'
எனும் புத்தம் புது தலைப்பில் கூறவந்தேன்...

சிறகை விரித்து வானதனில்
சீராய் பறக்கும் பெண் பருந்தை
சிட்டுக்குருவி என்றெண்ணி
சீண்டத் துணியும் மூடர்களே!

சித்திரப் பாவையாம் பெண்ணவளை
சிதறிடும் நீர்த்துளியாவதற்கு
சில சிந்தனையற்ற ஆணவரும்– வழி
சிந்திக்காமல் வகுத்திடுவார்

பாரதி கண்ட பாவையரே– இது
பாவம் என்று அறிந்திடுவீர்
பாவியர் உலகில் வாழ்ந்திடினும்–பருந்து
பறக்கும் நேரம் புரிந்திடுவீர்

தென்றல் போன்ற பெண்ணவளும்– பெரும்
புயலாய்மாற நொடி போதும்
சிந்தையிழந்த ஆண்களிடம்– இவ்
வாசகம் போய் சேரட்டும்.

**ய.ய.பூராதனி**
**யா/இந்து மகளிர் கல்லூரி.**

## ஊருக்குப் போவோம்

முப்பத்தைந்து வருடங்கள்
முகாரி இசைத்து நின்றோம்
தீபத்திருநாளின் மகிழ்வினிலே
பூபாளம் இசைத்திடுவோம்

வயாவிளான் சந்திவரை
பயமின்றி நாம் சென்று
தாய்மண்ணை முத்தமிட்டு
சேயாகி சேவிக்கிறோம்

முனைப்பான போரினால்
இருப்பான நிலத்தைவிட்டு
காப்பான இடம்தேடி,
கையில் கிடைத்தவற்றை
கடுகடுப்பாய் அள்ளியெடுத்து,
கடுகியே சென்றிருந்தோம்

சொந்தபந்தம் சூழ்ந்திருந்து
வந்தமர்ந்த மரநிழலில்
எந்நாளும் கூடி நின்ற
ஏக்கமது தொடர்ந்திடவே
தொலைதூரம் போய்விட்டோம்
தொலைந்தது வாழ்வென
அலைந்துதான் திரிந்து நொந்தோம்
கலைந்தது கூடென

மனையிழந்து மண்ணிழந்து
மகிழ்வுதனைத் தொலைத்திருந்தோம்
பல்லுயிரும் ஓம்பியநாம்
பல்லைக்காட்டி யாசித்தோம்
செம்மண்ணும் நன்னீரும்
நம்மண்ணின் வளங்களென
நம்பியிருந்த அந்த நாட்கள்
நம்மை ஏமாற்றிவிட்டன.

போர் வெற்றியின் வியூகங்கள்
பேர்கொண்ட தாக்குதல்கள்
வேர்கொண்ட எம்மவரை,
ஏர் சிறந்த எம்மூரை
கார்மேகம் மறைத்ததன்றோ?
கலைந்து தான் போனோமன்றோ
பார்த்துப் பார்த்து ஓடினோம்
பாரெங்கும் பரவினோம்

கலைந்த கனவுகளுடன்
நினைவுகள் சுமந்தவராய்
நிம்மதிப் பெருமூச்சொன்றை
நிமிர்ந்துதான் விடுகின்றோம்
ஊருக்குச் செல்வோமென
காத்திருந்து கனலாகிய
உறவுகளின் ஏக்கங்கள்
உன்னதமாய் விரிகின்றன

முப்பத்தைந்து வருடங்கள்
முகம் காணா மண்ணினை
அகம் நிறையப் பார்த்திட
ஆவன செய்தவர்க்கு நன்றிகள்
இருப்பைத் தக்கவைத்து
பொறுப்பை நாமுணர்ந்து
இனிமை சூழ் வாழ்வு வாழ்ந்து
இதயக் கோவில்கள் மகிழட்டும்
ஊருக்குப் போவோம்
உள்ளபடி வாழ்வோம்
நேர்கொண்ட நெஞ்சினராய்
பேர்பெற்ற விழுதுகளாய்...

**திருமதி. கிருஷ்ணவேணி சிங்கராஜன்**

## மௌனத்தின் தேடல்- 736



## புன்னகையோடு

ஏராளமான குடும்பங்களில் தந்தையின் நிலை
இதுபோன்ற குடும்ப பாரசுமை ஆகினும்
பிள்ளைக்காய் எல்லாவற்றையும் மறைத்து
முகத்திலே புன்னகையோடு வாழ்வது
என்பது ஒரு சாதாரண விடயம் அல்ல
ஒவ்வொரு தந்தையும் நம் வணக்கத்துக்குரியவர்கள்

**த.வினுஷயன்**
**துணவியூர், யாழ்ப்பாணம்.**

## மௌனத்தின் தேடல்- 737



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## பாசக்காரத் தந்தை

தாங் கொண்ணாத் துயரங்கள்
வந்திட்ட போதினிலும்
தன் மனதுக்குள்ளேயே புதைத்திடும்
பாசத்தந்தையே
அன்புக் குழந்தை ஆனந்தம் அடைய
ஆவலுடன் புன்னகை சிந்தி
கட்டியணைக்கும் அப்பாவே
தந்தையின் பாசத்துக்கு ஈடாக
வேறொன்று மில்லையே
நீயும் தரணியில்
பிதாமகனாக உயர்ந்து
நிற்கின்றாயே...

**ஆ.செல்வி. திருநாவலூர்.**

## சாபக்கேடு

புற முதுகில் குத்தும் கொடூரமானது
அரசியலில் சத்தமின்றித் தொடர்வதுண்டு
இங்கு வில்லம்பு தரும் வலியிலும்
ஓங்குவது சொல் அன்பின் வலிமையே
அற்ப ஆசைகளுக்காக கூலிப் படையாகி
கற்பக தருவாய் ஆயிரம் காலத்துப்
பயிரான
வாழ்வை முடக்கி வதைகள் புரியும்
வாழ் வெட்டுக் கலாச்சாரம் சாபக்கேடு
வாழும் அடிப்படை உரிமையில் தாங்காது
நாளும் கை வைப்பது பொறுமையைச்
சோதிக்கும்.

**க.நாகராசா, நுணாவில்.**

## முதுகுப்புறம் பேசுமா?

அப்பாவின் முதுகிலே அம்புகள்
பாய்ந்ததை அறியாத சிறுமியா நீ!
அம்புகள் பாய்ந்தாலும் கூட வேதனையை
அனுபவிக்கும் இந் நிலையிலே
மகளுடன் சிரித்து மகிழும்
தந்தையே உன் மனப்பலம்
என்னவோ? பின்புறத்தில்
எத்தனை ஆபத்து அறியாத சிறுமி
தந்தையின் தாடையை தடவிக்
கொள்கிறாள்.
புறமுதுகில் எத்தனை வேதனை
முன்புறத்தில் தெரியவில்லையா?
மறைந்துநிற்கும் வேதனையா?
கவனம்.

**அபி.குலமாலிகா**
**சித்தன்கேணி.**

## அன்பின் ஆணிவேர்

எத்தனை வேதனைகளை
முதுகில் சுமந்தாலும்
முகத்தில் புன் சிரிப்புடன்
முடிந்தவரை காப்பாற்றுவேன்
எனக் கூறும்
இந்த அன்புள்ளத்திற்கு
அகிலமே அடி பணியும்.

**துணவியூர், நடா.**

## தங்கமகள்

எத்தனை இடர்கள் எத்தனை சுமைகள் வந்தாலும்
அத்தனையும் தாங்கி அசராமல் நின்று
துணிவுடன் எதையும் தாங்குவேன் என் செல்லக்குட்டி
தங்கம் பாப்பா தன் வாழ்வியல் மகிழ்விற்காக

**சி.மகாலக்சுமி, கொக்குவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ஆலயமணி
பாடியவர் : T.m.சௌந்தரராஜன்
இயற்றியவர் : கண்ணதாசன்
திரையிசை : விஸ்வநாதன் & ராமமூர்த்தி



பொன்னை விரும்பும் பூமியிலே
என்னை விரும்பும் ஒருயிரே
புதையல் தேடி அலையும் உலகில்
இதயம் தேடும் என்னுயிரே
பொன்னை விரும்பும் பூமியிலே
என்னை விரும்பும் ஒருயிரே
புதையல் தேடி அலையும் உலகில்
இதயம் தேடும் என்னுயிரே

ஆயிரம் மலரில் ஒரு மலர் நீயே
ஆலயமணியின் இன்னிசை நீயே(2)
தாய்மை எனக்கே தந்தவள் நீயே
தங்க கோபுரம் போல வந்தாயே
புதிய உலகம் புதிய பாசம்
புதிய தீபம் கொண்டு வந்தாயே

பொன்னை விரும்பும் பூமியிலே
என்னை விரும்பும் ஒருயிரே
புதையல் தேடி அலையும் உலகில்
இதயம் தேடும் என்னுயிரே...

பறந்து செல்லும் பறவையைக் கேட்டேன்
பாடிச் செல்லும் காற்றையும் கேட்டேன்(2)
அலையும் நெஞ்சை அவரிடம் சொன்னேன்
அழைத்து வந்தார் என்னிடம் உன்னை
இந்த மனமும் இந்த குணமும்
என்றும் வேண்டும் என்னுயிரே

பொன்னை விரும்பும் பூமியிலே
என்னை விரும்பும் ஒருயிரே
புதையல் தேடி அலையும் உலகில்
இதயம் தேடும் என்னுயிரே...

ஆலமரத்தின் விழுதினைப் போலே
அணைத்து நிற்கும் உறவு தந்தாயே(2)
வாழைக் கன்று அன்னையின் நிழலில்
வாழ்வது போலே வாழவைத்தாயே
உருவம் இரண்டு உயிர்கள் இரண்டு
உள்ளம் ஒன்றே என்னுயிரே

பொன்னை விரும்பும் பூமியிலே
என்னை விரும்பும் ஒருயிரே
புதையல் தேடி அலையும் உலகில்
இதயம் தேடும் என்னுயிரே...

# ட்ரம்ப் வெற்றியால் உற்சாகத்தில் எலான் மஸ்க்!

அமெரிக்கத் தேர்தல் ஆணையம் முடிவுகளை அறிவிப்பதற்கு முன்பாகவே, 'நான்தான் அடுத்த ஜனாதிபதி' என்று அறிவித்துக் கொண்டு, ஃபுளோரிடாவில் வெற்றி உரை நிகழ்த்தினார் டொனால்ட் ட்ரம்ப். அந்த உரையில், தன்னைவிட மற்றொரு நபரை முன்னிறுத்தி, புகழ் பாடினார் ட்ரம்ப். 'We have a new star... A star is born' என்ற பில்டப் வாசகத்துடன் 'டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனரான எலான் மஸ்க்கை அறிமுகப்படுத்தினார்.

வெற்றி உரைக்குப் பிறகு, ட்ரம்ப் எலானுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க என்ன காரணம்... எலான், ட்ரம்ப்பை இவ்வளவு கொண்டாடுவது ஏன்? என்ற விவாதங்கள் அமெரிக்காவைத் தாண்டியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### ட்ரம்ப்பின் வெற்றியில் எலானின் பங்கு?

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் தொடங்கியபோதே, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த குடியரசுக் கட்சியின் வேட்பாளரான விவேக் ராமசாமியை வெகுவாகப் பாராட்டிவந்தார் எலான். கூடவே, ட்ரம்ப்புக்கு ஆதரவான கருத்துகளையும் அடுக்கி வந்தார். ஒருகட்டத்தில், ட்ரம்ப்பை ஆதரிப்பதாகக் கூறி, ஜனாதிபதித் தேர்தல் களத்திலிருந்து விலகினார் விவேக். பின்னர், ட்ரம்ப்பை ஆதரித்துத் தனது எக்ஸ் தளத்தில் பல்வேறு கருத்துகளைப் பதிவிட்டு வந்தார் எலான்.

குறிப்பாக, பென்சில்வேனியாவின் பட்லர் நகரில் ட்ரம்பிற்கு எதிராக நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுக்குப் பிறகு, அவருடைய தீவிர ஆதரவாளராக மாறினார் எலான். வெளிப்படையாக அவரை ஆதரித்து, பிரசாரக் கூட்டங்களிலும் பேசினார்.

வெறுமனே பிரசாரம் மட்டும் செய்யவில்லை. ட்ரம்ப்புக்காகக் கோடிக்கணக்கில் நிதியை இறக்கினார் எலான். ட்ரம்ப்பை வெற்றிபெறச் செய்ய 'சூப்பர் பிஏசி' என்ற பெயரில் பிரசாரக்குழு ஒன்றை உருவாக்கினார். அதற்கு எலான் மட்டுமே சுமார் 120 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கினார். இது இந்திய மதிப்பில் ரூ.1,000 கோடிக்கும் மேல். தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்பாக, வெற்றியைத் தீர்மானிக்கும் மாகாணங்களைக் குறிவைத்து, ட்ரம்பிற்கு களத்தைச் சாதகமாக மாற்ற கோடிகளை வாரி இறைத்தார் எலான். இது ட்ரம்ப்பின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றியது. நிதி மட்டுமல்லாமல், தனது எக்ஸ் தளம் மூலமும் ட்ரம்பிற்கு ஆதரவு தேடும் வேலைகளையும் முடுக்கிவிட்டிருந்தார் எலான்.

### எலான் அடையப்போகும் பலன்கள்?

'பலனை எதிர்பார்க்காமல் எந்தத் தொழிலதிபரும் அரசியல்வாதிகளுக்குப் பணத்தை வாரி இறைக்க மாட்டார்கள். எலானும் டசின் கணக்கில் பலன்களை எதிர்பார்த்தே ட்ரம்பிற்கு வேலை செய்திருக்கிறார் என்கிறார்கள் விவரமறிந்தவர்கள். ஏற்கெனவே, 'நான் வெற்றி பெற்றால், அரசாங்கத்தில் தேவையற்றதை அகற்ற எலான் தலைமையில் அரசு செயற்திறன் துறை ஒன்றை உருவாக்குவேன்' என்று குறிப்பிட்டிருந்தார் ட்ரம்ப். "இது சாத்தியமானால், வெள்ளை மாளிகையில் எலானின் செல்வாக்கு பல மடங்கு அதிகரிக்கும். அதன் மூலம், அவர் பல விடயங்களைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வார்" என் கிறார்கள் அமெரிக்க அரசியல் நோக்கர்கள்.



மேலும் "அரசின் செயற்கைக்கோள்களை விண்வெளிக்கு அனுப்பும் வணிகத்தில், ஏற்கெனவே பெரிய பலன்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறது எலானின் 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம். தற்போது, தன் நண்பர் ட்ரம்ப் மூலம் அந்த வணிகத்தை இன்னும் பல மடங்காக்க முயல்வார் எலான். போயிங் உள்ளிட்ட சில விண்வெளி நிறுவனங்களுடன் அமெரிக்க அரசு போட்ட ஒப்பந்தங்களைக் கடுமையாக விமர்சித்து வந்தார் எலான். ட்ரம்ப் ஜனாதிபதிபதவியேற்க விருப்பதால், அரசு ஒப்பந்தங்களில் அந்த நிறுவனங்களின் ஆதிக்கத்தைக் குறைத்துவிட்டு, 'ஸ்பேஸ் எக்ஸி'இன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயல்வார்.

பில்லியன் டொலர் முதலீட்டில் உளவு செயற்கைக்கோள்களை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறது பென்டகன். இனி அதற்கான ஒப்பந்தங்களும் ஸ்பேஸ் எக்ஸ் வசமே செல்லும் எனத் தெரிகிறது. ட்ரம்ப்பின் வருகையால், மின்சார கார்கள் விற்பனையைப் பெருக்குதல், தானியங்கி கார்களைச் சந்தைக்குக் கொண்டுவருதல் ஆகியவற்றைத் தனது டெஸ்லா' நிறுவனத்தின் மூலம் எளிதாகச் செய்து முடிப்பார் எலான். நிறுவனங்கள் விரிவாக்கம், புதிய ஒப்பந்தங்கள், அரசின் சலுகைகள் எனப் பல்வேறு விடயங்கள் இனி எலானுக்குச் சாதகமாக நடக்கும்.

டெஸ்லா தொழிலாளர்கள், தொழிற்சங்கம் அமைப்பதைத் தடுக்க முயன்றார் எலான். அது தொடர்பாக ஏற்கெனவே ட்ரம்ப்பிடம் எலான் பேசியிருப்பதாகவும் சர்ச்சை வெடித்திருக்கிறது. ட்ரம்ப்பின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தொழிலாளர் சுதந்திரத்தை நசுக்கவும் எலான் முயற்சி செய்வார் என்கிறார்கள்.

"தொழிலதிபரான ட்ரம்ப், நிச்சயம் சக தொழிலதிபரான எலானுக்குச் சாதகமாகவே நடந்து கொள்வார். பைடன் நிர்வாகமும் தொழிலதிபர்களுக்குப் பல சலுகைகளை வழங்கினாலும், பெரு நிறுவனங்கள்மீதான வரியை அதிகப்படுத்தும் கொள்கையையே கடைப்பிடித்தது. ஆனால் ட்ரம்ப்போ, 'பெரு நிறுவனங்கள், செல்வந்தர்கள் மீதான வரியைக் குறைப்பேன்' என வாக்குறுதியளித்திருக்கிறார். அதைச் செய்தால், மக்கள்மீது சுமை ஏறுவதோடு, எலான் உட்பட பலரும் பல மடங்கு லாபம் அடைவார்கள். ட்ரம்ப் வெற்றிபெற்ற அடுத்த நாளே எலான் நிறுவனங்களின் பங்குகள் உயர்ந்தன. இதனால், ஒரே நாளில் எலானின் சொத்து மதிப்பு, ரூ.2.19 லட்சம் கோடி உயர்ந்திருக்கிறது. இது வெறும் ஆரம்பம்தான்... இனி உலகின் நம்பர் ஒன் பணக்காரரான எலான் பல உச்சங்களை எட்டுவார் என எதிர்பார்க்கலாம்" என்கிறார்கள் அமெரிக்க அரசியலை உற்றுநோக்குபவர்கள்.

சர்ச்சைகளுக்குப் பெயர்போன இருவர் கைகோத்தால் என்ன நடக்கும் என்பதை இனி அமெரிக்க மக்களுக்குக் காட்டப்போகிறார்கள் ட்ரம்ப்பும் எலானும்... நாமும் பொறுத்திருந்து வேடிக்கை பார்ப்போம்.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

422

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# பெருகிவரும் டெங்கு கொள்ளை நோய் எம்மை பாதுகாத்துக் கொள்வோம்

சென்ற ஆண்டு இதே காலப்பகுதியில் அதாவது நவம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரை நாம் யாழ்ப்பாணத்தில் பாரிய டெங்குத் தொற்றுக்கு முகம் கொடுத்தோம். சுமார் 4000 பேர் வரை இந்த காலப்பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

யாழ்.மாவட்டம் முழுவதுமாக சுமார் 6000 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டார்கள். அவர்களில் சிலர் துரதிஷ்டவசமாக இறந்து போனார்கள். ஆஸ்பத்திரி விடுதிகள் நிரம்பி வழிந்தன. பாடசாலை மாணவர்கள் பரீட்சைகளுக்கு சமூகமளிக்க முடியாமல் சிரமப்பட்டார்கள்.

இப்போது நவம்பர் மாதம் இந்த வருடத்தின் டெங்கு கொள்ளை நோய்த் தொற்று ஆரம்பிப்பதற்கான காலம். எனவே போன மாரிகாலம் போலல்லாது இம் முறை போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

டெங்கு நோயானது ஒரு வைரஸினால் ஏற்படுகின்றது. டெங்கு வைரஸில் 4 வகைகள் உள்ளன. எனவே ஒருவருக்கு வாழ்நாளில் நான்கு டெங்கு நோய் தாக்கம் ஏற்படலாம். டெங்கு நோயானது ஒரு சமுதாயத்தில் பரவும்போது பலருக்கு எந்தவித அறிகுறிகளையும் காட்டாது.

சிலருக்கு சாதாரண காய்ச்சல் போல் ஏற்படுகின்றது. அதிலும் சிலருக்குத்தான் உடல் நோவுடன் கூடிய கடும் காய்ச்சல் ஏற்படுகின்றது. (Break bone Fever) மிக சிலருக்குத் தான் குருதிப்பாயம் (Plasma) குருதிக்குழாய்களில் இருந்து வெளியேறி டெங்கு குருதிப் பெருக்குக் காய்ச்சல் (Dengue haemorrhagic Fever) ஏற்படுகின்றது. இந்த நிலை மிகவும் அபாயகரமானது. இதனால் டெங்கு அதிர்ச்சி நிலை (Dengue shock) ஏற்பட்டு இறப்பு ஏற்படலாம்.


டெங்கு வைரஸானது (Aedes aegypti, Aedes albopictus) என்னும் இரு வகை நுளம்புகளால் பரப்பப்படுகின்றது. இந்த நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு சிறந்த வழியாகும். இதற்காக நுளம்பின் வாழ்க்கை வட்டத்தை நன்றாக அறிந்து வைத்திருக்க வேண்டும்.

Aedes நுளம்பின் நிறையுடலியானது சிறிய நிலையான சுத்தமான நீர்தேங்கும் இடங்களின் உட்சுவரில் நீரின் விளிம்புவரை முட்டையிடுகின்றது. இந்த முட்டைகள் சில நாட்களின் பின் அசைகின்ற குடம்பிகளாக மாற்றமடைகின்றன. குடம்பிகள் (Larvae) பின் அசையாத கூட்டுப் புழுக்கள் (pupae) ஆகின்றன.

கூட்டுப்புழுக்களில் இருந்து நிறையுடலிகள் வெளிவருகின்றன. முட்டைகளிலிருந்து நிறையுடலிகள் வர சுமார் 7 தொடக்கம் 10 நாட்கள் எடுக்கின்றது. பெண் நிறையுடலி (நுளம்பு) ஆனது 18 நாட்களில் இருந்து சில வாரங்கள் வரை உயிர் வாழ்கின்றது.

Aedes நுளம்பானது Dengue நோய்வாய்ப்பட்டவரை கடித்து 8-12 நாட்களில் அது மற்றவர்களுக்கு பரப்பக்கூடிய தன்மையை அடைகின்றது. அது மட்டுமல்லாது அது இடும் முட்டைகளிலும் இந்த வைரஸ் காணப்படுவதால் அவற்றிலிருந்து வரும் நுளம்புகளும் நோயைப் பரப்புகின்றன. ஒரு நுளம்புக்குத் தொற்று ஏற்பட்டால் அது தன் வாழ்நாள் முழுவதும் நோயைப் பரப்புகின்றது.

Aedes நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை தமது சூழலிருந்து அகற்றுவதுதான் பிரதானமானதாகும். முக்கியமாக சிறிய, நிலையான சுத்தமான நீர்தேங்கக்கூடிய சிரட்டைகள், கோம்பைகள், யோக்கட் மற்றும் ஐஸ்கீறீம் கப்கள், போத்தல்கள், கோப்பைகள் எமது சூழலிலிருந்து அகற்றப்படவேண்டும். அது மட்டுமல்லாமல் கூரையின் பீலிகள் மற்றும் காண்கள் என்பவை அடைபடாமல் நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



ஒவ்வொருநாளும் பாவிக்கும் நீர்த்தொட்டிகள், மலசலகூட கொமட் மற்றும் பான் என்பவற்றில் இருந்து நுளம்பு பெருகாது. ஆனால் அவற்றை பலகாலம் பாவிக்காமல் விட்டால் நுளம்பிக் குடம்பிகள் பெருக இடமுள்ளது. தொட்டிகளைப் பாவிக்காமல் உள்ளபோது அவற்றை நுளம்பு போகா வண்ணம் மூடவேண்டும். அல்லது ஒரு கிழமைக்கு ஒரு தடவை வழிந்தோடச் செய்ய வேண்டும். நுளம்பு முட்டைகள் தொட்டிகளின் உட்சுவரில் நீர் வடிந்தோடிய பின்னரும் காணப்படலாம். எனவே நீர்வடிந்தோடிய பின் உட்புறத்தை உரஞ்சிக் கழுவவேண்டும். இந்த முட்டைகள் சுமார் 8 மாதங்கள் வரை உயிருடன் இருக்கின்றன. எனவே போன மாரிக்குள் இடப்பட்ட முட்டைகள் இந்த மாரி மழையின் போது பொரிக்கலாம். இதை விட வீட்டிற்குள்ளேயுள்ள குளிர்சாதனப் பெட்டி நீர் வழங்கி (Water dispensor) போன்ற வற்றுனுள் தட்டுக்களில் இருக்கும் நீரிலும் நுளம்புகள் முட்டையிடலாம்.

எனவே ஒரு கிழமைக்கு ஒருதடவையாவது உங்கள் வீட்டையும் வளவையும் சுற்றிப்பாருங்கள். நுளம்பு பெருகும் இடங்களை அகற்றுங்கள். ஒரு நுளம்பு முட்டையிட்டு அதிலிருந்து நிறையுடலி நுளம்பு வர 7-10 நாட்கள் தேவை. எனவே ஒருகிழமைக்கு ஒருதடவை சுத்தம் செய்தால் போதுமானது.


(தொடரும்..)

Dr.எஸ். கேதீஸ்வரன்
பொது வைத்திய நிபுணர்.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிபி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தேர்தல் முடிவு; வைகோ அதிர்ச்சி



(சென்னை)

இலங்கையின் தேர்தல் முடிவுகள் குறித்து தமிழகத்தின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக நிறுவுனர் வை.கோபாலசாமி தமது அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்டை நாட்டில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்தியா மற்றும் புலம்பெயர் தமிழர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு இந்திய அரசு துரோகம் செய்யக் கூடாது என்று வலியுறுத்தியுள்ள வைகோ, இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை .

தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு ராஜபக்ஷ அரசாங்கமே காரணம் என்றாலும், அநுர குமார திசநாயக்க தொடர்ந்து தமிழர்களுக்கு எதிராக குரல் எழுப்பி வந்தார்.

அத்துடன் தேசிய மக்கள் சக்தி என்பது ஜனதா விமுக்தி பெரமுனாவின் மற்றொரு பதிப்பு மட்டுமே என்றும் வைகோ குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# தெற்கு அரசியல் கட்சி ஒன்று வடக்கின் நம்பிக்கையை வென்றுள்ளது

## ஐ.தே.க தவிசாளர் வஜிர பாராட்டு

(கொழும்பு)

தேர்தல் மூலம் தெற்கு அரசியல் கட்சி ஒன்று வடக்கின் நம்பிக்கையை வெற்றி கொண்டுள்ளமை தொடர்பில் எமது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் வரலாற்று வெற்றியை பெற்றுள்ளது. அதுதொடர்பில் நாங்கள் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். அதே போன்று இது இலங்கைக்கு விசேட சந்தர்ப்பமாகும்.

இலங்கை வரலாற்றில் ஒரு போது எமக்கு நிறைவேற்றிக்கொள்ள முடியாமல்போன விடயமொன்றை தற்போதை ஜனாதிபதியும் அதிகாரத்துக்கு வந்துள்ள அரசாங்கமும் வெற்றி வெற்றுள்ளது.

அது தொடர்பில் இலங்கையர்கள் என்றவகையில் நாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

எவ்வாறு இருந்தாலும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்துக்கு பாரிய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அதனை நிறைவேற்ற முடியாது என தற்போது அவர்களுக்கு தெரிவிக்க முடியாது. தேர்தலை வெற்றிகொண்டாலும் மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பல சவால்கள் இருக்கின்றன.

அது நாங்கள் பின்பற்றும் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே தெரிவிக்கிறோம்.

அதற்கு அவர்களுக்கு நாங்கள் இடையூறாக இருக்கக் கூடாது. அவர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை நாங்கள் இலங்கையர்களாக பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# தொடருந்து விபத்தில் சிக்கிய குடும்பம் இருவர் உயிரிழப்பு- நால்வர் படுகாயம்

(மாத்தறை)

மாத்தறையில் இருந்து காலி நோக்கி பயணித்த தொடருந்துடன் சிறிய ரக லொறி ஒன்று மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தானது, வெலிகம பொல்அத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு தொடருந்து கடவையில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய நால்வரும் மாத்தறை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பெண் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


தொடருந்து வருவதாக சமிக்ஞைகள் ஒளிரும் வேளையில் அருகில் இருந்தவர்கள் எச்சரித்ததையும் மீறி லொறி தொடருந்து கடவையின் ஊடாக செல்ல முற்பட்ட போதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் லொறியின் சாரதியான 34 வயதான திலிப பெரமுனகே மற்றும் அவரது தாத்தா பி.கே. சுகததாச என்பவருமே உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் உயிரிழந்த சாரதியின் 1 மற்றும் 7 வயதுடைய இரு பிள்ளைகள், அவரது மனைவி மற்றும் அவரது மனைவியின் தாயார் ஆகியோர் மாத்தறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், 34 வயதான மனைவியின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. (நி-8)

# பரமபிதா காட்டிய பாதை

## காலம் கடினமானதாகத் தோன்றினாலும் கடவுளிருக்கிறார்



பைபிளில் மாற்கு புத்தகத்தில் 13:24-32 பகுதி இன்று எமக்குத் தரப்படுகின்றது. கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்று தான் இயேசுவின் இரண்டாம் வருகை. இயேசு இரண்டாம் முறையாக வருகையின்போது அவர் நடுவராக உலகைத் தீர்ப்பிடுவார் என்பதுவே பொருள். "அந்நாள்களில் வேதனைகளுக்குப் பிறகு கதிரவன் இருண்டுவிடும் நிலா ஒளி கொடாது. விண்மீன்கள் வானத்திலிருந்து விழுந்த வண்ணமிருக்கும். வான் வெளிக் கோள்கள் அதிரும். இவை நிகழ்வதைக் காணும் போது மானிடமகன் கதவை நெருங்கி வந்துவிட்டார் என நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள்". இங்கு இயேசு என்ன சொன்னார் என்பதை கவனித்தால்: அவர் எந்த ஒரு திகதியையும் உறுதியாக சொல்லவில்லை. சீடர்களுக்கு எந்த ஒரு தடயமோ, அல்லது தமது இரண்டாம் வருக்கைக்கான எந்த ஒரு சரியான குறியீடும் கொடுக்கவில்லை.

இறப்பு வேண்டும் என்பதனால் அது வந்து விடாமல் இருக்கிறது. இறப்பே வேண்டாம், என்று நினைக்கிறவர்களையும், அது தீண்டாமல் விடுவதில்லை. இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்தத்தைப் புரியாமல் வாழ்கிறவர்கள் உலகத்தில் ஏராளம். அதனால், எதிர் கொள்ளும் பிரச்சினைகளும் ஏராளம். நடுவராக இயேசு மீண்டும் வரவிருக்கிற அந்த இரண்டாம் வருகை உலக முடிவில் தான் இருக்கும். உலக முடிவு எப்போது என்று மனுமகனுக்கே தெரியாது என்று இயேசுவும் கூறி விட்டார். எனவே, நம்மைப் பொறுத்த வரை, உலக முடிவு என்பது நம் ஒவ்வொருவரின் இறப்பு தான். நாம் இறக்கின்றபோது நடுவராம் இயேசு நம்மைத் தீர்ப்பிடுவார். அந்தத் தீர்ப்பின் வேளைக்காக நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் நாம் இறை வனுடைய பிரசன்னத்தை உணர்ந்து வாழ்வதும், நமது பணிகளை நேர்மையாக, செய்து முடிப்பதுமே இரண்டாம் வருகைக்கான நமது ஆயத்தமாகும்.

இயேசு தம் சீடர்களுக்கு நிறைவுக் காலம் பற்றி இன்னுமொரு விடயத்தை கூறுகின்றார்: கடவுளாட்சி ஏற்கெனவே வந்துவிட்டது. என்றாலும் அதன் முழுமை இன்னும் மலரவில்லை. இயேசு இறுதி வெற்றி உறுதியாக வரும் என கற்பிக்கிறார். இந்த உலகில் நிலவுகின்ற அநீதிகளும் அட்டூழியங்களும் ஒருநாள் முடிவுக்கு வரும். குறைகளும் குற்றங்களும் மலிந்த நம் வாழ்வு ஒரு நாள் ஒளிமயமானதாக விளங்கும் என அவர் அறிவுறுத்துகிறார். ஆனால் அந்த நிறைவுக் காலம் எப்போது வரும்? என்னும் கேள்விக்கு இயேசு பதிலளிக்க மறுத்துவிட்டார். இந்த நிறைவு காலம் எமக்கு எதிர்காலத்தில் தான் வரும் என்கிறார் இயேசு. மனித நேயத்தோடு வாழ்ந்தால் பல இழப்புக்கள், ஒதுங்கி வாழ்ந்தாலும் வாழ முடியாது. பின் வாங்கவும் முடியாது. நற்செய்தி விழுமியங்களை முதன்மைப் படுத்தி வாழ்ந்தால் ஏராளம் தொல்லைகள். இதனால் எதிர் காலத்தை பற்றி அறிய ஆவல் கொண்டு கத்தோலிக்கத்தின் நம்பிக்கைக்கு முரணாகச் செல்லுகின்றோம்.

நம்மில் எத்தனை பேர் இன்று எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறோம்? எப்படி அதை அறிய ஆசைப் படுகின்றோம் என்பது சுவாரஸ்யமானது தான். கத்தோலிக்கர்கள் எனக் கூறிக் கொண்டு பங்குத்தளங்களில், பக்திக் குழுக்களில் பைபிளை தூக்கிக் கொண்டு வேதம் போதிக்கின்றவேளை கை பார்க்கின்ற நல்ல சாத்திரக்காறரை நாடிச்சென்று குறிகேட்டு வாழ்வை பாழாக்குபவர்கள் பற்றி நாமறிவோம்.

எனவே எதிர் காலத்தைத் தெரிந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்தில் ஒரு பகுதி யையாவது அந்த எதிர்காலத்தை எதிர் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்ப்பதில் செலவிட்டால், எவ்வளவோ பிரச்சினைகளை வெல்லலாம். எதிர்காலம் என்பதில் பிரச்சினை கூட்டமாக சேர்த்து வந்தாலும், அந்தக் கூட்டத்தின் மத்தியில் நல்ல வைகளை, நல்லவர்களைப் பார்த்து கை குலுக்கிக் கொள்ளும் பக்குவம் நாம் பெறவேண்டும். பைபிளில் கூறப்பட்டதன் படி, இறுதிக் காலம் கடினமானதாகத் தோன்றலாம். ஆயினும், இயேசு இந்த வார்த்தைகளைப் பேசுவது பயத்தைத் தூண்டுவதற்காக அல்ல, ஆனால் கடவுளின் திட்டங்களைப் பற்றிய ஆழமான புரிதலுக்கு நம்மை அழைப்பதற்காக என்பதை நினைவில் கொள்வது அவசியம். கொந்தளிப்புகளுக்கு மத்தியில், கடவுள் இன்னும் இருக்கிறார் என்ற உறுதியுடன் இயேசு நம்மை ஆறுதல் படுத்துகிறார். துன்பத்தின் அறிகுறிகளே, நாம் விழிப்புடனும் இருக்க அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவூட்டுகிறது, இறை நம்பிக்கையை வளர்க்கும் மனப்பக்குவத்தை நாம் வளர்த்துக் கொள்ள இறைவன் துணையை நாடுவோம்.

ம.பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இருந்து ஓய்வு

## மஹிந்தானந்த அறிவிப்பு

(கொழும்பு) முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். நேற்று நாவலப்பிட்டி மஹிந்தானந்த அளுத்கம அறக்கட்டளை அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தும் போதே அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக தெரிவித்துள்ளார். தனது சேவை கண்டி மாவட்ட மக்களுக்கு தேவையில்லை என்பதை பொதுத் தேர்தல் நிரூபித்ததன் காரணமாக அரசியலில் இருந்து ஓய்வுபெற தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)




# வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

**1.பதவி- கணக்குப்பதிவாளர் - சம்பள குறியீட்டு இல 215/11 (வெற்றிடம் 01)**

01. சம்பள அளவுத்திட்டம் :- 19280-190×10-210×10-23280-231360-2280×10-2520×10-279360,

02. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் கணக்குப் பதிவாளர் / வெளிக்கள உத்தியோகத்தர் / எழுதுநர் / காசாளர் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப்பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர் / எழுதுநர் / காசாளர் பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் அல்லது

ஆ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமாவுடன் / இதற்கு சமனான தகைமை / மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் துறைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்./

க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் துறை பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**2. பதவி - காசாளர் சம்பள குறியீட்டு இல 306/12 (வெற்றிடம் 01)**

01. சம்பள அளவுத்திட்டம் :- 18820-170×10-185×10-22370-225840-2040×10-222010-268440

02. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-

அ) கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத்திட்டப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திர பரீட்சையில் சித்தி / க.பொ.த. உயர் தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த சாதாரண தரப்பத்திரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

**3.பதவி-களஞ்சியப்பொறுப்பாளர் - சம்பள குறியீட்டு இல 202/13 (வெற்றிடம் 01)**

1. சம்பள அளவுத்திட்டம்:- 18360-160×10-170×10-21660-220320-1920×10- 2040×10-259920

2. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த. சாதாரணதரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் மொழி உட்பட 3 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

**4. பதவி - எழுதுநர் - சம்பள குறியீட்டு இல - 302/12 (வெற்றிடம் 01)**

1. சம்பள அளவுத்திட்டம்:- 18820-170×10-185×10-22370-225840-2040×10-2220×10-268440

2. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர் / கணக்காய்வு எழுதுநர் / காசாளர் /கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப்பதிவாளர் / எழுதுநர் / காசாளர் /கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்,

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் / பயிற்சி நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்குபதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி

ஈ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**5. பதவி - எழுதுநர் - சம்பள குறியீட்டு இல - 302/14 (வெற்றிடம் 01)**

1. சம்பள அளவுத்திட்டம் :- 17900-155×10-165×10-21100-214800-1860×10-1980×10-253200

2. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர் / காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர் / காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரன தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**6. பதவி - எழுதுநர் - சம்பள குறியீட்டு இல302/15 (வெற்றிடம் 01)**

1. சம்பள அளவுத்திட்டம்: 17435-145×10-160×10-20485-209220-1740×10-1920×10-245820

2. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் / காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம், அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி

**07. பதவி - கிளை முகாமையாளர் - சம்பள குறியீட்டு இல -208/15 (வெற்றிடம் (02)**

1. சம்பள அளவுத்திட்டம்: 17435-145×10-160×10-20485-209220-1740×10-1920×10-245820

2. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் -

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிளை முகாமையாளர் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

**08. பதவி - விற்பனை உதவியாளர் சம்பள குறியீட்டு இல - 308/17 (வெற்றிடம்-03)**

1. சம்பள அளவுத்திட்டம்: -16515-130×10-145×10-19265-198180-1560×10-1740×10-231180

2. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/ 08 ஆந் தர கல்விச் சான்றிதழ்.

**ஏனைய விபரங்கள்**

01.மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான சம்பள திட்டங்கள் அனைத்தும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 02/2022 சுற்று நிருபத்திற்கு அமைவானது.

02.வயதெல்லை -18-45 (சங்கப்பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருந்தமாற்று).

03.இப் பதவிக்குரிய அடிப்படை சம்பளத்தை விட கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

04.குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.

05. ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் அச் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

06. தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் ரூபா100.00 இனை செலுத்தி பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், பதவிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு **"தலைவர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வங்களாவடி சந்தி வேலணை"** எனும் முகவரிக்கு 2024.12.01 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுதபால் அல்லது நேரிலோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(நி-534)

தலைவர்,
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதில்லையேல் எப்போதும் இல்லை எனும் மந்திரச் சொல்லை சதா நினைவில் வையுங்கள்.

- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இதுவரை நீங்கள் மக்களை ஏமாற்றினீர்கள் இம்முறை மக்கள் உங்களை ஏமாற்றினார்கள்

தேசிய மக்கள் சக்தி எனும் ஒரு சிங்கள அரசியல் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று ஆசனங்களையும் வன்னி மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களையும் பெற்றமை தமிழ் அரசியல் தரப்புகளிடையே பேரதிர்ச்சியையும் பெரும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு முடிவை தமிழ் அரசியல்வாதிகள் எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

பொதுவில் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பதன் காரணமாக வாக்குகள் சிதறடிக்கப்பட்டு ஒவ்வொரு தமிழ்க் கட்சிக்கும் தலா ஓர் ஆசனமேனும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பே நம்மவர்களிடம் இருந்தது.

அதேநேரம் தமிழ் அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரத்தின் பொருட்டு வாக்காளர்களைத் தேடிச் சென்று சந்தித்தபோதெல்லாம், உங்களுக்குத்தான் எங்கள் வாக்கு என தமிழ் மக்கள் கூறியிருந்தனர்.

அதனை நம் தமிழ் அரசியல்வாதிகள் மலையாக நம்பினர்.

ஆனால் நடந்தது என்ன? எங்களை ஏமாற்றியவர்களை நாங்களும் ஏமாற்ற வேண்டும். அதுதான் அவர்களுக்கு நாம் வழங்கக்கூடிய தக்க தண்டனை என நம் தமிழ் மக்கள் கருதினர்.

காலம் கனிந்தது. தேர்தல் வந்தது. மக்கள் வாக்களித்தனர்.

வட மாகாணத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி வரலாற்றுச் சாதனை படைத்தது.

வடக்கில் ஐந்து ஆசனங்களைத் தனதாக்கியது.

கூடவே தமிழ் அரசியலில் கோலோச்சிய அரசியல்வாதிகளையெல்லாம் தாண்டி ஒரு சுயேட்சைக்குழு வெற்றி பெற்று பாராளுமன்ற ஆசனத்தைத் தனதாக்கிக் கொண்டது.

நல்ல காலம். குறித்த சுயேட்சைக்குழு போட்டியிடாமலிருந்தால், அந்த வாக்குகளும் தேசிய மக்கள் சக்திக்குப் போயிருந்தால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வாறான நிலைமை நிச்சயம் தமிழ் அரசியல்வாதிகளுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தவே செய்யும்.

அதிலும் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை அடுத்த பொதுத் தேர்தலில் சீராக்கலாம் என்று மனதைத் தேற்றுவதற்கும் அறவே இடமில்லை.

2024இல் நடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை அஸ்திரமாகப் பயன்படுத்தினர்.

ஆம், தமிழ்த் தேசியம் என்று சொல்லிச் சொல்லி எங்கள் தமிழ் இனத்தை ஏமாற்றியவர்களுக்கு எதிராக தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை பிரம்மாஸ்திரமாகப் பயன்படுத்தினர்.

இனி நாங்கள் தேசிய ஒற்றுமை பற்றிக் கூடிய கவனம் செலுத்துவோம் என்ற செய்தியை தமிழ் மக்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

உண்மை. இது காறும் நீங்கள் தமிழ் மக்களை ஏமாற்றினீர்கள். அந்த ஏமாற்றம் பல வருடங்களாக நீடித்தன.

ஆனால் நம் தமிழ் மக்கள் ஒரு நாள் மட்டுமே உங்களை ஏமாற்றினார்கள். எல்லாம் அம்போ என்றாயிற்று.

இனியும் நீங்கள் அரசியலில் இருக்க விரும்பினால், எல்லோரும் கூடியிருந்து ஆராயுங்கள் இனியேனும் ஒற்றுமை ஒளியை ஒன்றாக ஏற்ற முடியுமா என்று.

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம்

# வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை கண்காணிப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இறுதி அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

இது தொடர்பான அறிக்கையை தேர்தல் ஆணைக்குழு வளாகத்தில் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் 10 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் குழுவொன்று இம்முறை பொதுத் தேர்தலை கண்காணிப்பதற்காக நாட்டிற்கு வருகை தந்திருந்தது.

அதன்படி, தேர்தலுக்கு முன்னைய காலம், தேர்தல் நாள் மற்றும் தேர்தலுக்குப் பின்னைய காலப்பகுதியில் தங்கள் அவதானிப்புகளை மேற்கொண்டிருந்தனர். (ம-7)

# கணக்குக் காட்டாவிட்டால் வழக்குத் தொடரப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு வேட்பாளர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் தொடர்பிலான தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத அனைத்து வேட்பாளர்களுக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டத்தின் படி, தேர்தல் முடிந்த 21 நாட்களுக்குள் அனைத்துச் செலவு அறிக்கைகளையும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பொதுத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களைச்சேர்ந்த 8 ஆயிரத்து 888 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

இந்நிலையில், உரிய நேரத்தில் வருமான அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளர் சிந்தக குலரத்ன தெரிவித்தார். (ம-7)

## போதை மாத்திரைகள் மீட்பு

புத்தளம், கற்பிட்டி, முசல்பிட்டி பிரதேசத்தில் கடந்த 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 4 இலட்சத்து 42ஆயிரத்து 680 போதை மாத்திரைகள் அடங்கிய 18 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

## 20 பெண் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு

2024ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தலில் 20 பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலான பெண்கள் தேசிய மக்கள் சக்திக் கட்சியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பட்டியலில் இருந்து பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஹரிணி அமரசூரிய, கடந்த பொதுத் தேர்தலின் போது தேசிய பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

**பெண் பிரதிநிதித்துவம்**

- தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்டத்தில் சமன்மலி குணசிங்க
- பதுளை மாவட்டத்தில் அம்பிகா சாமுவேல்
- நிலாந்தி கோட்டஹச்சி
- களுத்துறை மாவட்டத்தில் ஓஷானி உமங்கா
- மாத்தறை மாவட்டத்தில் சரோஜா போல்ராஜ்
- இரத்தினபுரி மாவட்டத்தில் நிலுஷா கமகே
- கேகாலை மாவட்டத்தில் சாகரிகா அதாவுத
- புத்தளம் மாவட்டத்தில் ஹிருணி விஜேசிங்க
- பொலநறுவை மாவட்டத்தில் சதுரி கங்கானி
- கண்டி மாவட்டத்தில் துஷாரி ஜயசிங்க
- காலி மாவட்டத்தில் ஹசர லியனகே
- மாத்தளை மாவட்டத்தில் தீப்தி வாசலகே

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்த இரண்டு பெண்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய முன்னாள்,

- அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவின் மகளான சமிந்திரனி கிரியெல்ல,
- முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2024**

**"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை. "**

- சார்ள்ஸ் டார்வின்
பரிணாமக் கொள்கையின் தந்தை

# அரசியலில் இருந்து ஓய்வு பெற மாட்டேன்

## மகிந்த தெரிவிப்பு

அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலகுவில் தாம் அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் தாங்கள் எதிர் பார்த்த எண்ணிக்கையில் ஆசனங்கள் கிடைக்கப் பெற்றது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த அரசாங்கம் சிறந்த முறையில் ஆட்சி செய்யும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் மக்கள் அவர்களைத் தேர்வு செய்துள்ளார்கள் எனவும் மக்களின் ஆணையை மதிப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் நாடு முன்னேறவும் இடமுண்டு வீழ்ச்சி அடையவும் இடமுண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

## மூன்று நாள் செயலமர்வு

(கொழும்பு)

பத்தாவது பாராளுமன்றத்திற்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற மரபு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் மூன்று நாள் செயலமர்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வு இம்மாதம் 25, 26, 27 ஆகிய திகதிகளில் நடத்தப்படவுள்ளதாக பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு நேற்று சனிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகள் காரணமாக பாராளுமன்ற ஊழியர்களின் விடுமுறையும் 18 முதல் 22 வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர் வரும் 21ம் திகதி காலை 10 மணிக்கு கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடு கடத்தலுடன் தொடர்பு

# சந்தேகித்த வாகனத்தை மடக்கிப்பிடித்த இளைஞர்கள்



(முல்லைத்தீவு)

மாடுகளை கடத்தி செல்வதற்கு பயன்படுத்தப் பட்டதாக சந்தேகிக்கப்படும் வாகனத்தினை புதுக்குடியிருப்புப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இளைஞர்கள் மடக்கிப் பிடித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மைக் காலமாக வளர்ப்பு மாடுகள் திருட்டுப் போகும் சம்பவங் கள் அதிகளவில் பதிவாகி வருகின்றன.

கடந்த மாதம் புதுக் குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் வீட்டுக் காணி ஒன்றில் இருந்த சிறிய பட்டியில் சிறுகன்றுகளின் தாய் மாடுகளினை கன்றுகளை தவிக்கவிட்டு மனிதாபிமானம் அற்ற நிலை யில் திருடிச்சென்றிருந்தனர். அதே போல் புதுக்குடியிருப்பு பகுதிகளில் அதிகளவான வளர்ப்பு மாடுகள் திருட்டு போயிருந்தது.

இதனையடுத்து குறித்த கால்நடைவளர்ப்பு உரிமையாளர்களினால் பொலிஸில் முறைப்பாடு வழங்கியும் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படவில்லை.

இதனையடுத்து மாடு கடத்துவதற்கு பயன்படுத் தப்பட்டதாக சந்தேகிக்கப் படும் ஒரு வெள்ளை நிற வாகனம் நடமாடுவதை குறித்த கிராம மக்கள் அவதானித்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிடிக்க முயற்சி செய்து பலனளிக் காத நிலையில் வாகன இலக்கத்தினை கண்காணித்து வைத்திருந்தனர்.

நேற்று முன்தினம் குறி த்த வெள்ளை நிற வாகனம் புதுக் குடியிருப்பு நகர் பகுதி யில் சென்ற நிலையில் இளை ஞர்கள் ஒன்றிணைந்து மடக் கிப்பிடித்துள ளனர். இதனையடுத்து அப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டமையை தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப் பட்டிருந்தது. சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்த வாகனத்தையும், சாரதியையும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தி ற்கு அழைத்து சென்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (நி-8-299)

## தமிழ் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவு காலத்தின் கட்டாயம்

### தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கம்

(மன்னார்)

கடந்த எழுபது ஆண்டு கால அரசியல் உரிமைக்கான ஜனநாயக மற்றும் ஆயுதப் போராட்டங்களை எதிர் கொண்ட தமிழினம் பல்வேறு விதமான இழப்புகளையும் நெருக்கடிகளையும் வலிகளையும் வாழ்வியல் சுமைகளையும் எதிர் கொண்டு வருகிறது.

எனவே தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரி வித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

2009 இற்குப் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு நெருக்கடிக்குள் தமிழினம் சிக்கித் தவிக்கிறது. காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருபவர்கள் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை தொடர்ச்சியாக வன் வலு கடந்த மென் வலுவில் நடைமுறைப்படுத்தி வரு கின்றனர். அதை எதிர் கொள்வது பாரிய சவாலாக உள்ளது. அதிலும் பிரிந்து நின்று எதிர்கொள்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

ஆகவே ஒன்றாக இணைந்து அரசின் நெருக் கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தமிழ்க்கட்சி களின் பதவி சண்டையால் தங்களுக்குள் முரண்பட்டு பல அணிகளாக பிரிவடைந்துள்ளனர். தமக்குள்ளான முரண்பாடு பொது எதிரியை மகிழ்விக்கும் இந்த தேர்தல் களம் தமிழ்க் கட்சிகள் தமது முரண்பாட்டையே பேசுபொருளாக்கியது.

இதனால் வெறுப்படைந்த பொதுமக்கள் தமிழ்த்தேசிய கோட்பாட்டுச் சித்தாந்தத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர். தமிழ் கட்சிகளிலும் பல்வேறு விதமான தவறுகளும், குறை பாடுகளும் காணப்படுகின்றன. அவற்றை அவர்கள் விரைவில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரே இலக்கில் செயற்பட முனைவோர்கள் பிரிந்திருந்ததனால் வடக்கு மாகாணத் தேர்தல் களம் பல்வேறு விதமான சோத னைகளை ஏற்படுத்தியிருக்கிறது. கிழக்கு மக்கள் விழித்துக் கொண்டதால் தம்மை தற்காத்துக் கொண்டனர்.

எனவே தமிழ்த்தேசிய கட்சிகள் தமக்குள் இருக்கின்ற பகைமையை மறந்து குறைந்த பட்சம் ஒன்றாக இணைந்து மீண்டும் கூட்டமைப்பாக இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் நிர்ப்பந்தமும் ஆகும். இவ்வாறான ஐக்கியமில்லா விட்டால் அசுர பலத்தோடு வெற்றி பெற்றுள்ள அரசை எதிர்கொள்ளக்கூடிய வலிமை தமிழர் தரப்பிடம் இல்லாமல் போய்விடும்.

ஆகவே எதிர்காலத்தில் நடைபெறுகின்ற தேர்தல்களிலும் சரி, தமிழ்த்தேசிய உரிமை ஜனநாயக போராட்ட விடயங்களிலும் சரி, ஒன்றாக இணைந்து எதிர்கொள்வதே அவசியமாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (நி-8-285)


## கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## மேலதிக முத்திரைத்தீர்வை நிதி

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்கள்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2024.11.18 ஆம் திகதியிலிருந்து 2024.11.29 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3,000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம்,பிரதி) பூரணப்படுத்தி தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2024.12.02 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2024.11.25 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/ASD/2024/ K.V.V/03 | அரியாலை கோட்டை விநாயகர் வீதி புனரமைப்பு. | 4.15 | 49 நாட்கள் | C8 & C7 வீதி | 63 நாட்கள் | 62,500.00 | 2025.03.02 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**

2024.11.17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறவழி...

உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற தன் பின்னர், நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிலும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 15 வருடகால அரசியல் பயணத்தில் என் ஆத்ம பலமாகவும், அரசியல் பலமாகவும் தம் உடனிருப்பை வழங்கி, கொள்கையின்பாற்பட்ட பயணத்தின் பங்குதாரர்களாக இருந்த உங்கள் ஒவ்வொருவரது கரங்களையும் நன்றியோடு பற்றிக்கொள்கிறேன்.

திட்டமிட்டு பின்னப்பட்ட சதிவலைகளின் உள்ளிருந்தவாறே, தமிழ்த் தேசியத்தின் இருப்புக்காய் போராடத் தலைப்பட்ட என்னையும், எனது பாதையையும் எமது மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்ற நிறைவே, எனது அரசியல் பணியையும் பயணத்தையும் இன்னும் வலுவூட்டும்.

என்னுள் நானாக இருந்து என்னை இயக்கும் எங்கள் தேசத்தில் விதையுண்ட ஆத்மாக்களின் அரூப பலத்தோடு, என் மக்களுக்கான தமிழ்த் தேசியப் பயணத்தை தடையற்றுத் தொடர்வேன்.

நிலைபிழக்க வைத்த அலைகளின் நடுவே தமிழ்த் தேசியக் கொள்கைக்குக் கிடைத்த இந்த வெற்றி கார்த்திகையின் கனதியை உறுதி செய்யட்டும் என்றுள்ளது. (ம-7)

## புதிய அமைச்...

மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதன்படி 25 பேருக்கும் குறைவான அமைச்சரவையொன்று நியமிக்கப்படும் என, தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். (ம-7)

## புதிய உறுப்பினர்...

10ஆவது பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 196 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்துக்கமைய, இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை தங்களது கட்சியின் சார்பில் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் கட்சிகள் அறிவிக்க வேண்டும்.

அதன் பின்னர் 29 தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். (ம-7)

## புதிய சபாநாயக...

பினர் பிமல் ரத்நாயக்க நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த விடயம் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில், புதிய பிரதமர் மற்றும் சபாநாயகர் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளவர்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வெளியாகி வருகின்றன. (ம-7)

## தேசியப்...

அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்குக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 21 ஆம் திகதி மொட்டுக் கட்சி சார்பாக நாமல் பாராளுமன்றம் செல்லவுள்ளார்.

பொதுத் தேர்தலில் மொட்டுக் கட்சிக்கு இரண்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன. தேசியப் பட்டியல் ஊடாக ஓர் ஆசனம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வடக்கில்...

மழைக்கு வாய்ப்புள்ளது என யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவரும் வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கைக்குத் தெற்கே காற்றுச் சுழற்சி ஒன்று உள்ளது. அத்துடன் அரபிக் கடலிலும் காற்றுச் சுழற்சி ஒன்று உள்ளது. அத்துடன் மேடன் யூலியன் அலைவின் (MJO) உள் வருகை காரணமாக இந்து சமுத்திர பிராந்தியத்தில் வடகீழ் பருவமழையும் தீவிரமடைந்துள்ளது. இவற்றின் காரணமாக அடுத்த சில நாட்களுக்கு குறிப்பாக எதிர்வரும் 22.11.2024 வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் அவ்வப்பொழுது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் நிலம் நிரம்பு நிலையை எட்டியுள்ளது. அத்துடன் தொடர்ச்சியாக மழையும் கிடைத்து வருகின்றது. குறிப்பாக 19.11.2024 வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதனால் தாழ்நிலப் பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்கும் வாய்ப்புள்ளது.

எனவே தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ள அனர்த்தம் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

வடகீழ் பருவ மழையின் தீவிரத்தன்மையினை இனிவரும் வாரங்களில் அனுபவிக்க முடியும். நான் முன்னரே குறிப்பிட்டது போன்று நவம்பர் மாதத்தின் 18 நாட்கள் மழை நாட்களாக இருக்கும் என்பது மீளவும் குறிப்பிடக்கூடியது.

தொடர்ச்சியாக எதிர்வரும் 23.11.2024 ஆம் திகதி அளவில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. அது எதிர்வரும் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அண்மித்த பகுதிகளுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தாழமுக்கம் தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தோல்வி...

பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக பாராளுமன்றம் செல்ல முடியாது என்றும் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள் (ம-7)

## ஒரு வார...

மேலும் தெரிவிக்கையில்,

2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நிறைவடைந்துள்ள நிலையில் அடுத்த ஒரு வார காலத்துக்கு அமைதியான காலம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் பொலிஸ் அதிகாரிகள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

தெரிவு செய்யப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படும். இந்த ஒரு வார காலத்துக்கு பொது இடங்களில் பிரசாரங்களையும், கூட்டங்களையும் நடத்த முடியாது.

இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 18 வேட்பாளர்கள் உட்பட 581 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 5657
R 7 0 6 3 1 3
அத சம்பத
R 6 3 1 3
சீட்டிழுப்பு இலக்கம் 232
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1687
C 48 59 75 79 C
Double Chance 27260

மெகா பவர்
திகதி 16/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2005
M 17 04 36 44 67
Double Chance 195358

லக்கி 7 VIP
திகதி 2024.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 0483
D 8 4 5 6 3 6 D

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3899
சீட்டிழுப்பு திகதி 16.11.2024
X 15 18 48 80
X 004004

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 966
சிம்மம் 23 33 37 55 சிம்மம்
187560 20

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.11.2024 365
Z 6 5 7 6 5 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,632,720.00
61539
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2631
சீட்டிழுப்பு திகதி 2024.11.16 தினம் சனிக்கிழமை
30 44 54 68 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,798,085.60
DLB

சனிதா
திகதி 16.11.2024 வெற்றி வாரம் 4792
08 09 53 57 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,400,506.80
ரூ. 100,000/- 09307
DLB

சசிரி
வெற்றி வாரம் 558
சீட்டிழுப்பு திகதி 16.11.2024 சனிக்கிழமை
04 09 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4343
சீட்டிழுப்பு திகதி 16.11.2024 தினம் சனிக்கிழமை
07 11 20 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,662,012.80
147624
DLB

கப்ருக
Y 05 10 42 50 58
சீட்டிழுப்பு வாரம் 1807
16.11.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,504,772.40
DLB

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2457
சீட்டிழுப்பு திகதி : 2024.11.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,598,406.40
ADA KOTIPATHI
10 49 67 71 V
320010
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு/ கடை வாடகைக்கு தேவை

யாழ். நகரில் அலுவலக பாவனையுடன் கூடிய வாகனத்தரிப்பிட வசதி கொண்ட தங்குமிட வசதியுடைய வீடு/ கடை வாடகைக்குத் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்

077 2960 787/077 6110 185

(2429)


## நபரொருவர் அடித்துக் கொலை

அத்துமீறி வீட்டினுள் நுழைந்து அறையின் கதவை உடைத்து அங்கிருந்த நபர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் சாலியவெவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம்(15) அதிகாலை சாலியவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யாய 07 பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டினுள் நுழைந்த சந்தேகநபர்கள் பொலலினால் தாக்கிக் குறித்த நபரை கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 35 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

கடந்த 14 ஆம் திகதி இரவு மதுபான விருந்து ஒன்றில் ஏற்பட்ட வாக்கு வாதத்தில் பங்கேற்றிருந்த இருவர் இந்தக் கொலையைச் செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)


## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி பாடசாலையை அண்மித்த பகுதியில் கொழும்புத் துறை வீதி, பாண்டியன்தாழ்வில் 2 பரப்புக் காணி மற்றும் கடையுடன் கூடிய அழகிய வீடு விற்பனைக்குண்டு.

437.441.5699

email : saitheva09@gmail.com

(2439)

## வேலைவாய்ப்பு

NO.198, கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS (PVT) LTD AIR TICKETING அலுவலகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் ( Sabre System தெரிந்தவர்கள் ) விரும்பத்தக்கது/ அனுபவமற்றவர்களுக்கு: Training கொடுக்கப்படும்.

021 222 8555, 076 691 1082

077 108 3482

மின்னஞ்சல்:- sbtravels99@yahoo.com

(C-1535)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை வீதியில் 400m தூரத்தில் பிரதான வீதியில் இருந்து 50m தூரத்தில் இரண்டாவது காணியாக உள்ள 20 பரப்பு 6 குளி அளவுடைய மேட்டுக்காணி உடன் விற்பனைக்குள்ளது.

வீடு கட்டுவதற்கு உகந்த மேட்டுக்காணி 4 துண்டுகளாகப் பிரித்தும் வழங்கப்படும்

077 4366 704 / 075 1640 104

(547)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.

PASS in UK A1 Exam.

Exam REGISTRATION CENTER.

Practical to UKVI on Computer

(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

(2508)

## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/Cகளும் பழுதடைந்து விட்டது என்று கவலையா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையிலும் உத்தரவாதத்துடனும் செய்து கொடுக்கிறோம்.

076 834 6136

(2443)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள் தொடர்புகளுக்கு :

075 033 6759

(2415)

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 38,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

(548)

## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சிறுநீரகம் அவசரமாக தேவை.


வயதெல்லை 45 (உட்பட்டவர்)

077 540 6732

077 723 8937

(2423)

## விவசாயிகளுக்கு



சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிரேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய. இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

அத்துடன்



இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர், பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

ஆர்க். என். கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021

A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571

A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

(2440)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகில் பலாலி வீதியில் இருந்து இரண்டாவது காணி 2 பரப்பு விற்பனைக்கு.

(தரகர் தவிர்க்கவும்)

077 082 1010

( உரிமையாளர் )

(2427)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 60 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம்

மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 986 5457

(2437)

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை



சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணம் 11 kg மேற்பட்ட பொதிகளுக்கு

UK 1400/= France 2300/= Germany 2100/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

TCN Express

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.

T.P - 077 755 4528

(543)

## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322

077 77 19 322

Visit Visas

Air Tickets

கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1600)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | |
| 1Kg சம்பா | - 230/= | |
| 1Kg கீரி சம்பா | - 250/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 230/= | |
| 1Kg சோயா | - 440/= | |
| 1Kg உளுந்தம் பருப்பு | - 780/= | |
| 1Kg சிவப்பு கௌபி | - 688/= | |
| 01 டசின் தீப்பெட்டி | - 175/= | 240/= |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | 480/= |
| 01 சன் பப்படம் | - 185/= | 235/= |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | 500/= |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 985/= | 1050/= |



போக்கட் 48/= 80/=



400g Anchor 1000/= 1050/=

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு

Facebook:- happy basket.lk

இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket

0777 8080 30

(548)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.